Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 14 ஹிஜ்ரி 1428 சஃபான் 25 (30.09.2005) வெள்ளிக்கிழமை இதழ்:365

# லட்சக்கணக்கான மக்கள் கூடும் ‘பொங்கு தமிழ்’ நிகழ்வு இன்று!




நிகழ்வுக்கு தயாராகும் அரங்கு

## யாழ்.குடாநாடே எழுச்சிக்கோலம்

யாழ்ப்பாணம்—

நடைமுறையில் இருக்கும் தமிழீழ அரசை அங்கீகரிக்கக் கோரும் வவுனியா பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் - ‘பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடனம் - 2005’ நிகழ்வு இன்று பிரமாண்டமான முறையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருப்பதாகவும் -

இந்த மாபெரும் எழுச்சிநிகழ்வில் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று திரண்டு தமது வல்லமையையும் - அபிலாஷையையும் சர்வதேச சமூகத்துக்கு வெளிப் படுத்துவர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு மருத்துவபீட மைதானத்தில் ஆரம்பமாகும் பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடன நிகழ்வுக்கு யாழ்.குடாநாட்டின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிக்கள் உயிரிழந்துவிட்டதாக பிரான்ஸ் நிதியை சுருட்டிய அரசு!

பாரிஸ்—

முல்லைத்தீவில் இருந்த மக்களும் நாடாளு மன்ற உறுப்பினர்களும் சுனாமியால் உயிரிழந்துவிட்டதாக - இலங்கை அரசாங்கம் பொய்யான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து, பிரான்ஸின் பாரிஸ் மாகாண அரசாங்கத்திடம் இருந்து 30 லட்சம் யூரோ நிதியை சுருட்டியுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது - முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 30 லட்சம் யூரோக்களை வழங்குவதாக பாரிஸ் மாகாண அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

இலங்கை அரசு முல்லைத்தீவில் மக்கள் சுனாமியால் இறந்துவிட்டனர் என்றும் - நாடாளு மன்ற உறுப்பினர்களும் உயிரிழந்து அல்லது காணாமற்போய்விட்டதாகவும் பொய்யான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து இந்த நிதியை சுருட்டியுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரொறன்ரோ கார்விபத்தில் இரு யாழ் இளைஞர் பலி!

ரொறன்ரோ—

கனடா ரொறன்ரோ நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார் விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஜோன்சன் (வயது - 23), காங்கேசன்துறை ஊறணியைச் சேர்ந்த இன்னொரு இளைஞனுமே பரிதாபகரமாக மரணமடைந்தவர்களாவர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

கனடா ரொறன்ரோ நகருக்கு அண்மையில் நடைபெற்ற கார் பவுசர் விபத்தின்போது கார் தீப் பற்றிக் கொண்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.காவின் முடிவு

## நிர்வாகக் குழுக் கூட்டத்தை

## இறைச்சிக்கடை உரிமையாளர்

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சுருட்டியுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இ.தொ.காவின் முடிவு 5 ஆம் திகதி அறிவிப்பு!

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற தமது கட்சியின் நிலைப்பாட்டை எதிர்வரும் 5 ஆம் திகதி அறிவிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

ஆறுமுகம் தொண்டமான் சிவில் விமானசேவைகள் துறைமுக விவகார அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்து உரையாடிய பின்னர் அவருடன் அலரிமாளிகைக்குச் சென்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்(12 ஆம் பக்கம் பார்க்க)

# நிர்வாகக் குழுக் கூட்டத்தை சந்திரிகா இன்று கூட்டுகிறார்

கொழும்பு

சமாதான முயற்சிகள், சமஷ்டிமுறை மற்றும் சுனாமிக்கு பின்னரான முகாமைத்துவ செயற்பாடு தொடர்பாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சி எத்தகைய நிலைப்பாட்டைப் பின்பற்றவேண்டுமென்பது தொடர்பாகத் தீர்மானிப்பதற்கு இன்று மாலை கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா கூட்டவுள்ளார்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் மற்றும் அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினதும் கொள்கைகள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளதாகவும், எனவே அவற்றைத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இறைச்சிக்கடை உரிமையாளர் மூதூரில் சுட்டுக்கொலை!

கொழும்பு

திருகோணமலை மூதூரில் நேற்றிரவு 7.30 மணியளவில் இறைச்சிக்கடை உரிமையாளரொருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலைசெய்யப்பட்டவர் 42 வயதுடைய அப்துல் சமது அப்துல் ஹக்கீம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனது கடையை மூடிவிட்டு வீட்டிற்கு திரும்புவதற்கு தயாராகிக்கொண்டிருந்த நேரம் இவரை எதிர்கொண்ட இளைஞர் ஒருவர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டு தப்பிச் சென்றார். குறிப்பிட்ட நபரின் உடலில் 8 துப்பாக்கிச்(12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளுக்கு கருணா குழுவினரால் அச்சுறுத்தல்!

கொழும்பு

கிழக்கில் அரசபடைகளுடன் இணைந்து செயற்படும் கருணா குழுவினரால் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் கண்காணிப்புக் குழுவின் முக்கிய பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு அதி கரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து கண்காணிப்புக் குழுவின் அலுவலகங்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. கண்காணிப்புக் குழுவின் முக்கிய உறுப்பினர்கள் தாக்குதல் அச்சமற்ற பிரதேசங்களுக்கு மாற்றப் பட்டுள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி வெலிக்கந்தையில் திறக்கப்படுவதற்கு ஏற்பாடாகியிருந்த கண்காணிப் புக் குழுவின் கிளை அலுவலகத்திட்டமும் (12 ஆம் பக்கம் பார்க்க)

**நமது ஈழநாடு மூன்றாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ் வண்ணமலராக அதிக பக்கங்களுடன் நாளை வெளிவருகிறது.**

**உங்கள் பிரதிக்கு உங்கள் முகவர்களிடம் சொல்லி வையுங்கள்.**

**விலை ரூபா 10/=மட்டுமே**

# தாம் வைத்திருந்த ஆயுதங்களை ஜே.வி.பி. ஏன் ஒப்படைக்கவில்லை?

## - ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு

விடுதலைப் புலிகள் - ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென மேடைகளில் கோஷமிடும் ஜே.வி.பியினர் இன்னமும் தம்மிடமுள்ள ஆயுதங்களை ஒப்படைக்காதிருப்பது ஏனென்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பினார். பெல்மதுளை பளுகட பிக்குகள் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -டி.பி. விஜயதுங்க அரசாங்கத்தில் நான் இருந்தபோது ஜனநாயக அரசியல் நீரோட்டத்துக்குள்(12 ஆம் பக்கம் பார்க்க)



# இனியும் தமிழர் தேசம் பொறுக்காது இதை வெளிப்படுத்த ஒன்றிணைவோம்!

## – விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் –

யாழ்ப்பாணம்—

விட்டுக்கொடுப்பு மனோபாவத்துடன் சிங்கள தேசத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தோம் - இனிமேலும் தமிழர் தேசம் பொறுத்திருக்காது என்பதை வெளிப்படுத்த இன்றைய பொங்குதமிழ் நிகழ்வில் அணிதிரளுமாறு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவிப்பு விடுத்துள்ளது.

இந்தஅறிக்கையில் -

பொங்குதமிழ் எழுச்சி பெறும் அரசியல் போரட்டம் அல்ல. பதவி நாற்காலிக்காய் தமிழர் உரிமையை விலை பேசும் சிங்கள அரசியல்வாதிகள் இதை அவ்வாறாக எண்ணி விடக்கூடும்.

எமது வீடுகளிலிருந்து இராணுத்தை வெளியேறுமாறு கூறுவதும், எமது விளைநிலங்களுக்கும், எமது பாடசாலைகளுக்கும், எமது தொழிலுக்கும், எமது கடலுக்கும் நாம் மீண்டும் செல்ல வழிசமைக்குமாறு கோருவது வெறும் அரசியல் போராட்டம் அல்ல. இது எமது உயிர் வாழ்வுக்கான போராட்டம்.

உரிய நிர்மான கட்டுமானங்கள் சகிதம் நடைமுறை அரசுஒன்றை கொண்டிருந்த நிலையிலேயே நாம் விட்டுக்கொடுப்பு மனோபாவத்துடன் சிங்களதேசத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டோம். சர்வதேசம் இதை புரிந்துகொள்ள வேண்டும். இனி மேலும் தமிழர் தேசம் காத்திருக்காது என்ற சேதியை இன்று மிகத் தெளிவாக உணர்த்துவோம்.

எனவே அனைத்துக்கட்கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள், கூட்டுறவாளர்கள், பணிப்பாளர்கள், அனைவரும் அணிதிரண்டு பொங்குதமிழில் பொங்கியெழுந்திட வாரீர் என யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## தமிழ் மொழித்திறன் தேர்வு

யாழ்ப்பாணம்—

ஆசிரியர் தினத்தையொட்டி தமிழ் மொழித் திறன் தேர்வு நாளை காலை 9 மணி தொடக்கம் 12மணி வரையும் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது.

இதில் கோப்பாய் கோட்டத்தில் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நல்லூர் கோட்டத்தில் - இந்துமகளிர் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கோட்டத்தில் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் இந்த தேர்வு நடைபெறவுள்ளதால் தேர்வுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களையும், விண்ணப்பிக்காத ஆர்வமுள்ள ஆசிரியர்களையும் அனுப்பி வைக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களை கேட்டுள்ளார்

இதேவேளை - நாளை நடைபெறவிருந்த விவசாய அறிவுப்போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி, முன்னர் குறிப்பிட்ட நிலையங்களில் நடத்தப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உடற்கல்வி ஆசிரியர்களுக்கு அவசர வேண்டுகோள்

யாழ்ப்பாணம்—

உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்று ஆசிரியர் நியமனம் கிடைத்தவர்களை தரம் 3 Iக்கு உயர்த்துவதற்கு அனைவரும் தமது டிப்ளோமா சான்றிதழ்களை பல்கலைக்கழகத்தில் உறுதிப்படுத்தி, நாளை பிற்பகல் 3 மணிக்கு வேம்படிக்கு அருகாமையிலுள்ள சங்கப் பணிமனைக்கு எடுத்துவரவும்.

கடந்த சனிக்கிழமையிலிருந்து இந்த விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. எதிர்வரும் 3ஆம் திகதி திருகோணமலைக்கு அனுப்பவுள்ளதால் காலதாமதமின்றி சான்றிதழ்களுடன் சமுகம் தரும்படி சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் கேட்டுள்ளார்.

## சிறுவர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்—

சர்வதேச சிறுவர் தினமான நாளை சிறுவர் தின நிகழ்வுகள் றக்காவீதியில் உள்ள திருமறைக் கலாமன்றத்தில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது. திருமறைக்கலாமன்றத்தின் வருடாந்த நிகழ்வுகளின் அங்கமாக கொண்டாடப்படும் இந்தத் தினத்தில் திருமறைக் கலாமன்ற 20 கிளைகளைச் சேர்ந்த சிறுவர் கலைக்கூட சிறுவர்களையும், பொறுப்பாசிரியர்களையும் நாளை காலை 8.30 மணிக்கு யாழ். திரு மறைக் கலாமன்றத்தில் ஒன்று சேருமாறும், வரும்போது சிறுவர் உரிமை வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளையும் கொண்டு வருமாறு யாழ். திருமறைக்கலாமன்ற சிறுவர் கலைக்கூட பொறுப்பாசிரியர்கள் கேட்டுள்ளனர்.

## மின்சார கம்பி அறுந்து விழுந்தது

யாழ்ப்பாணம்—

மழை பொழிவால் மின்ஒழுக்கு ஏற்பட்டு மின்சாரக் கம்பி அறுந்து வீழ்ந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் றக்கா வீதியில் இடம்பெற்றது. நேற்று காலை லேசான மழை பெய்து கொண்டிருந்த சமயம் றக்கா வீதியில் தொழிற்சாலைக்கு மின் விநியோகம் செய்யும் திறிபேஸ் மின்சாரக் கம்பி மீது மழை பொழிவு ஏற்பட்டதால் மின் ஒழுக்கு ஏற்பட்டு கம்பி நிலத்தில் அறுந்து வீழ்ந்தது. இதன் காரணமாக அருகில் இருந்த மரங்களில் தீப்பற்றியது. இதனால் மின்சாரம் தடைப்பட்ட தால் தொழிற்சாலை பணிகளும் சிறிது நேரம் ஸ்தம்பித்தது. சம்பவ இடத்துக்கு வந்த மின்சாரசபை ஊழியர்கள் திருத்தப் பணிகளை மேற்கொண்டனர்.

## சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்—

சட்டக்கல்லூரி அனுமதிக்கான பரீட்சை நாளை கொழும்பில் 68 நிலையங்களில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு 1000 பேர் தோற்றவுள்ளனர். அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அனுமதி அட்டை கிடைக்காதோர் உடனடியாக பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (தே)

## பொங்கு தமிழ் நிகழ்வுக்கான பாதை, வாகன ஒழுங்கு

யாழ்ப்பாணம்—

கடந்த 27-07-2005 அன்று வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த் தேசிய பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள மாபெரும் பொங்கு தமிழ் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஒன்று திரளவுள்ளனர்.

அன்றையதினம் மைதானத்தைச் சூழவுள்ள பகுதிகளில் சன நெரிசலையும், வாகன நெரிசலையும் குறைப்பதற்காகப் பின்வரும் ஒழுங்கமைப்பைப் பின்பற்றி நிகழ்வு சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு பெங்குதமிழ் ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது.

| இடம் | பாதையும், வாகனத்தரிப்பிடமும் |
|---|---|
| யாழ். நகரப்பகுதி,தீவகப்பகுதி | பிறவுண் வீதியூடாக நரியன் குண்டுக் குளத்தடி. |
| வலி.மேற்கு | நாச்சிமார் கோவிலடியிலிருந்து கலட்டிச் சந்தி வரை. |
| தென்மராட்சி | திருநெல்வேலி சிவன் அம்மன் கோவில் வீதி ஊடாக கோவில் முன்றலில். |
| வடமராட்சி | திருநெல்வேலிச் சந்திக்கும்,கல்வியங்காட்டுச்சந்திக்கும் இடைப்பட்ட ஆடியபாதம் வீதி. |
| கோண்டாவில் தொடக்கம் புன்னாலைக்கட்டுவன் வரை | திருநெல்வேலிச் சந்திக்கும்,கோண்டாவில் சந்திக்கும் இடைப்பட்ட பலாலி வீதி. |
| வலி.வடக்கு, வலி.தெற்கு | நந்தாவில் அம்மன் கோவில் பகுதி, பொற்பதி வீதி, புகையிரத வீதி. |

துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் வண்டிப் பாவனையாளர்களுக்குரிய தரிப்பிடமாக

1) யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய முன்றல்.
2)யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானம்.
3)திருநெல்வேலி பனிக்கர் வளவு மைதானம்.

மேற்படி ஒழுங்கமைப்பை பின்பற்றி இலகுவானதும், வசதியானதுமான போக்குவரத்தின் ஊடாக நிகழ்வு சிறப்புற நடைபெற அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டுவதாக பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

## விளம்பர அறிவூட்டல் பலகை நாட்டப்படவுள்ளது

உடுவில்—

சர்வதேச நல்லொழுக்க தினத்தையொட்டி சக்தி போரூட் அமைப்பினரால் 'எது எமது தெரிவு' எனும் விளம்பர அறிவூட்டல் பலகை நாட்டப்படவுள்ளது.

மகிழ்வான வாழ்வுக்காக மது, புகை,போதைப்பொருள் பாவனையைத் தடுப்போம் என்னும் வாசகம் பொறிக்கப்பட்ட விளம்பர அறிவூட்டல் பலகை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் முன்பாகவுள்ள கூட்டுறவு வைத்தியசாலை வளவில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நாட்டிவைக்கப்படவுள்ளது. (101)

## விசேட கலந்துரையாடல்

கிளிநொச்சி—

சூழல் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக இன்று மு.ப. 10 மணிக்கு கரைச்சிப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் சகல திணைக்களத் தலைவர்கள், கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், வர்த்தக சங்கத் தலைவர்கள், செயலாளர்கள், பாடசாலை அதிபர்கள், கிராம சேவையாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்/ செயலாளர், கமக்கார அமைப்புத் தலைவர்/ செயலாளர், சனசமூக நிலையத் தலைவர்/செயலாளர், பொறுப்பாளர்கள், தமிழீழ அமைப்புசார் நிறுவனங்கள் பங்குபற்றி தங்களின் மேலான ஆலோசனைகளையும், பங்களிப்பையும் வழங்கி உதவுமாறு கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் கோரியுள்ளார்.

## மேலும் 5000 பட்டதாரிகளுக்கு கல்வியமைச்சில் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம்—

பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் பேருக்கு நிரந்த நியமனங்களை வழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுவரை 20ஆயிரம் பட்டதாரிகளுக்கு கல்வியமைச்சில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனை விட மேலும் 5 ஆயிரம் பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் கல்வியமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 6, 7, 8, 9 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், நிரந்தர நியமனம் பெறும் இந்தப் பட்டதாரிகள் பாடசாலைகள், வலயக் கல்விப் பணிமனைகள், கல்வியமைச்சில் பல்வேறு பணிகளில் அமர்த்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## அங்குரார்ப்பண கூட்டம்

யாழ்ப்பாணம்—

பலாலி பழைய ஆசிரிய, மாணவ சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை பி.ப. 1 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறுமென பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

## முதியோர் கௌரவிப்பு

அரியாலை—

அரியாலை அபிவிருத்திச் சங்கம் முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர் கௌரவிப்பு விழாவை நடத்தவுள்ளது.

நாளை மாலை 4.30 மணியளவில் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் பத்மநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக உலக வங்கி வீடமைப்புத் திட்ட ஆலோசகர் குழுவின் அணித் தலைவர் கலாநிதி கந்தையா குணராசா, சிறப்பு விருந்தினராக கிராம உத்தியோகத்தர் இ. சேதுராசா ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

மேற்படி நிகழ்வில் அரியாலையில் உள்ள முதியவர்கள் கொரவிக்கப்படுவதோடு அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ''தெளிந்தது புத்தி'' என்ற நாடகமும், அரியாலை ஜோதி கலாமன்றத்தின் ''திசைமாறும் பயணங்கள்'' என்ற நாடகமும் இடம்பெறவுள்ளது. (55)

## கருத்தரங்கு

வலிகாமம்—

வலிகாம வலய முறைசாராப் பிரிவினரால் குழுக்களை வழிப்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பாடசாலை அதிபர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (72)


### சிறு விளம்பரம்

**பத்தாயிரம் பனம் விதை சேகரித்தல் போட்டி-2005**

இயற்கையின் சொத்து பனம் பொருள் உற்பத்திகளாகும். ஆர்வமுடையோர் எழுத்து மூலமாக தொடர்பு கொள்க. தொடர்பு:- சிவதர்சினி பனம் பொருள் உற்பத்தி தனியார் நிறுவகம், நுணாவில் மத்தி, சாவகச்சேரி. வே. கெ.தனபாலன். (2073)

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

29-05-2005 அன்று பிற்பகல் 5 மணியளவில் முறிகண்டிக்கும் - மாங்குளத்துக்கும் இடைப்பட்ட பிரதான சாலையில் பெண்களுக்குரிய கைப்பை ஒன்று முக்கிய ஆவணங்கள் நகை பணத்துடன் ந.ராமதாஸ் சி.சயந்தன் என்பவர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி D8 உருத்திரபுரம் புனித பற்றிமா பாடசாலையில் பெற்றுக்கொள்ளவும்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஸ்மற்றும் பலர்நடித்த
கிச்சா வயது - 16
காட்சி நேரம் : 6.00 மட்டும் (பி.ப.)

மனோகரா யாழ்ப்பாணம்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான ஜெயம் ரவி நடித்த
மழை
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
சரத்குமார், வைகைப் புயல் வடிவேலு, நமீதா நடித்த
சாணக்யா
இன்று மட்டும் காட்சிகள் :6.30, 9.30 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
கஜினி



ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
இன்று மட்டும் பு.நே: இரவு 6.30, 9.30



டிஜிற்றல் போட்டோ கொப்பி
$A_4$ - கறுப்பு வெள்ளை - 3.00 ரூபா
$A_4$ - கலர் - 40.00 ரூபா
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/4609)

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

விசேட கலந்துரையாடல்

எதிர்வரும் 03-10-2005 அன்று காலை 11 மணிக்கு எமது சங்கத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. இதை முக்கிய விடயமாகக் கருதி சகல அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

தலைவர் இ.பேரின்பநாயகம் (C/4678) செயலாளர் கா.பாஸ்கரன்

கதிர்காமர் கொலை

# இரண்டு சந்தேக நபர்களுக்கும் தொடர்ந்து விளக்கமறியல்!

கொழும்பு —

முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலையுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் சந்தேக நபர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டுமென நீதிவானிடம் கோரிக்கை விடுத்தனர். சட்டத்தரணிகளின் கோரிக்கையை நிராகரித்து கொழும்பு மாவட்ட நீதவான் சந்தேக நபர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (01)

# சோமாலியாவில் வைத்து கடத்தப்பட்ட கப்பல் இதுவரை விடுவிக்கப்படவில்லை

கொழும்பு —

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட உலக உணவுத்திட்டம் வாடகைக்கு அமர்த்திய சரக்குக் கப்பல் இதுவரை விடுவிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோமாலியாவில் சுனாமி தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென கொண்டு செல்லப்பட்ட 850 தொன் அரிசியுடன் இந்தக் கப்பல் கடற்கொள்ளையர்களால் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டது.

இந்தக் கப்பலின் கப்டனான இலங்கையர் உட்பட 10 கப்பல் பணியாளர்கள் தொடர்ந்தும் கொள்ளையர்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிக்க 50 லட்சம் டொலர்களை வழங்குமாறு கேட்ட கடற்கொள்ளையர்கள் பின்னர் கப்பலில் உள்ள அரிசிக்கு பணயக் கைதிகளையும், கப்பலையும் சோமாலிய தலைநகருக்கு வடக்கில் வைத்து விடுவிப்பதாகக் கூறினர்.

எனினும் கப்பல் தொடர்ந்தும் 50 கிலோமீற்றர் தொலைவில் நங்கூரமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட மற்றுமொரு கப்பலும் அங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

எகிப்திலிருந்து சோமாலியாவுக்கு சீமெந்து ஏற்றிச்சென்ற கப்பலே கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

கொள்ளையர்களின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்த உலக உணவுத்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜேம்ஸ் மேரிஸ் தடுத்துவைக்கப்பட்டுள்ள கப்பலையும், பணியாளர்களையும் நிபந்தனைகள் இன்றி விடுவிக்க வேண்டும் என தெரிவித்தார். கடற் கொள்ளையர்களின் இந்த நடவடிக்கை சர்வதேச சட்டங்களுக்கு முரணானதெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (01)

புலிகளுக்கு தன்னாட்சி அரசு குறித்த

# யாழ்.ஆயரின் கருத்துக்கு ஹெல உறுமய கண்டனம்!



கொழும்பு —

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தன்னாட்சி அரசு நடத்த சர்வதேச சமூகம் அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் கூறியதற்கு, ஜாதிக ஹெல உறுமய கண்டனம் தெரிவித்துள்ளது.


இது குறித்து ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் ஓமல்பே சோபிததேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

இலங்கையில் அரசியல் யாப்புக்கும், சட்டங்களுக்கும் எதிராக தனியரசை ஆதரிக்கும் உரிமை யாழ்.ஆயருக்கு இல்லை. அவரது கருத்துகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தனியரசு கோரிக்கையை ஆதரிப்பதாக உள்ளது.

ஆயுதக்குழுவை ஒரு மதத் தலைவர் ஆதரித்துப் பேசுவது மரபல்ல.

தேசிய கத்தோலிக்க சபையும் யாழ்.ஆயரின் கருத்தை ஆதரிக்கிறதா? தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த கத்தோலிக்க சபையின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்படவேண்டும் என்று ஓமல்பே சோபிததேரர் கூறியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய விமர்சனம் செய்துள்ள யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் வெளியிட்டிருந்த அறிக்கையில் -



போர்நிறுத்தத்திலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் நம்பிக்கை கொண்டவர்களாக தமிழ் மக்கள் நீண்டகாலம் காத்திருந்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்த எதுவுமே நடைபெறாமல், காலம் வேகமாக நகர்ந்துகொண்டிருக்கிறது.

சுனாமி அழிவுக்கான பொதுக் கட்டமைப்பையும் அரசு கைவிட்டது. இந்த நிலையில் அரசு எப்படி தமிழ்மக்களின் நீண்டகால பிரச்சினையைத் தீர்த்துவைக்க முடியும்?

தமிழ்மக்கள் தமது நிலைப்பாட்டை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் மிகத் தெளிவாக காட்ட வேண்டிய ஒரு காலம் வந்துவிட்டது. பொறுத்தது போதும் என நாங்கள் பொங்கியெழும் நேரம் வந்துவிட்டது.

தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமையோடும், தன்னாட்சி அதிகாரத்தோடும் வாழும் உரிமையைப் பெற்றுத்தர சர்வதேச சமூகம் இனியும் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

# இராணுவத்தை கலைத்து விட்டு நாட்டை புலிகளிடம் ஒப்படைக்கப் போகிறீர்களா?

## ஊனமுற்ற இராணுவத்தினர் சங்கம்

கொழும்பு —

இராணுவத்துக்கு எதிராக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறியுள்ள கருத்துக்கு உடல் ஊனமுற்ற முன்னாள் இராணுவத்தினர் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றால் அவர்தான் முப்படைகளுக்கும் தலைவர். அதனால் அவர் ஜே.வி.பியின் பேச்சைக் கேட்பாரா? அல்லது நிராகரிப்பாரா? ஜே.வி.பியின் பேச்சைக் கேட்டு இராணுவத்தைக் கலைத்துவிட்டு நாட்டைப் பிரபாகரனிடம் ஒப்படைக்கப்போகிறாரா?

ஒன்றுபட்ட இலங்கை என்ற கோட்பாட்டுக்காக நடத்தப்பட்ட யுத்தத்தில் உயிரிழந்த வீரர்களைக் கொச்சைப்படுத்துவதாக சோமவன்சவின் இந்தப் பேச்சு உள்ளது.

இந்த நாட்டில் காலடி வைக்க சோமவன்சவுக்கு உரிமையில்லை. 1988-1989 காலங்களில் இந்த நாட்டின் மக்கள் மீது தாக்குதல்களை நடத்தியது ஜே.வி.பி. அப்போது நாட்டைக் காப்பாற்றியவர்கள் இராணுவத்தினர். இதில் ரகசியம் ஒன்றுமில்லை.

இராணுவத்தினர் திறமையற்றவர்களாக இருந்திருந்தால் 20 ஆண்டுகாலப் போரை எதிர்கொண்டிருக்க முடியுமா? உண்மையில் இந்த யுத்தங்கள் எல்லாமே அரசியல்வாதிகளின் தூண்டுதலால்தான் நடந்தது என்பது தானே உண்மை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்காளர் அட்டைகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு



கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான வாக்காளர் அட்டைகள் தொடர்பாக தேர்தல்கள் செயலகத்துக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை ஒன்றை வழங்குமாறு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளை தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார்.

ஏதேனும் ஒரு காரணத்தால் வாக்குச்சாவடிகளுக்கு மறுவாக்குப்பதிவு நடத்தவேண்டி ஏற்பட்டால் இந்த அறிக்கை உதவியாக இருக்குமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்னும் 49 நாட்களில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் 5 பேர் இதுவரை தேர்தல் செயலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தேசிய முன்னணி, ஐக்கிய சோசலிசக் கட்சி, புதிய இடதுசாரி முன்னணி, இலங்கை முற்போக்கு முன்னணி போன்ற கட்சிகளின் வேட்பாளர்களே இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதற்கிடையில் வடக்கு - கிழக்கு கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வாக்களிக்க யுத்த சூனியப் பிரதேசங்களில் கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. (01)

# கள்ளியந்தீவு கிராமத்தில் அதிரடிப்படையினர் தேடுதல்!

அம்பாறை —

அம்பாறை - திருக்கோவில் கள்ளியந்தீவு கிராமம் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் விசேட அதிரடிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகளுக்குட்படுத்தப்பட்டது.

சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது படையினர் வீடு வீடாகச் சென்று சோதனையிட்டனர். அனைவரினதும் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டதுடன் பெயர்களையும் படையினர் பதிவு செய்துள்ளனர்.

எனினும், யாரும் கைது செய்யப்பட்டதாகத் இதுவரை தகவல்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கண்காணிப்புக்குழு - புலிகள் அம்பாறையில் சந்தித்து பேச்சு!

அம்பாறை —

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட தளபதிகளுக்கும், அம்பாறை மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்குமிடையே கடந்த செவ்வாய்க்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றது.

காஞ்சிரங்குடா பகுதியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தலைமையிலான பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகள் தரப்பினருக்குமிடையே காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பு ஒன்றரை மணி நேரம் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் சார்பில் அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ராம், அம்பாறை மாவட்ட தளபதி லெப். கேணல் ஜனார்த்தனன் ஆகியோர் கலந்துகொண்டனர். அத்துடன் அம்பாறை மாவட்ட மக்கள் பிரதிநிதிகளான சௌந்தரராசா, சண்முகநாதன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

பேச்சுக்களின் போது அம்பாறை மாவட்ட மக்கள் மீது விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்கள், மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாக தெரியவருகின்றது.

உயிலங்குளம் சோதனைச்சாவடியை பூட்டியதால்

# மன்னார் எழுச்சி நிகழ்வுக்கு சென்று திரும்பிய மக்கள் அவதி

மன்னார் —

உயிலங்குளம் சோதனைச் சாவடியை இராணுவம் திறந்து விட மறுத்ததால் - மன்னார் தேசிய எழுச்சி நிகழ்வில் பங்கேற்று திரும்பிய மக்கள் பெரும் அவதிக்குள்ளானதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் தேசிய எழுச்சி நிகழ்வையொட்டி போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக இராணுவத் தரப்புடன் கடந்த 26 ஆம் திகதி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை நடத்தினர்.

அன்றைய சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியிலிருந்து மன்னார் எழுச்சி நிகழ்வில் பங்கேற்கும் மக்கள் திரும்புவதற்கு ஏற்ப உயிலங்குளம் படையினரின் சோதனைச் சாவடியை இரவு 10 மணி வரை திறக்க படைத்தரப்பு இணக்கம் தெரிவித்தது.


ஆனால், படைத்தரப்பினர் சோதனைச் சாவடியின் கதவுகளை அடைத்துவிட்டதால், மக்கள் பெரும் அவதிக்குள்ளாக நேரிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் நிகழ்வை முடித்துத் திரும்பிய மக்கள் அனைவரும் பஸ்கள் மற்றும் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு கைகளை உயர்த்தியபடி செல்லுமாறு கேட்கப்பட்டதாகவும், சோதனைச் சாவடிகள் மூடப்பட்டதால் வீதிகளிலேயே மக்கள் படுத்துறங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதுகுறித்து படைத்தரப்பில் இருந்து கிடைக்கும் தகவலின்படி - மன்னார், கச்சேரியில் படையினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்களிடையேயான சந்திப்பில் எழுச்சி நிகழ்வில் புலிக்கொடி ஏற்றக்கூடாது என படையினர் வலியுறுத்தியதாகவும், அதில் இணக்கம் காணப்பட்டதாகவும், அவ்வாறாயின் தாம் முழு ஒத்துழைப்பை வழங்குவதாகவும் படையினர் இணங்கியதாகத் தெரியவருகிறது.

ஆனால், இந்த இணக்கப்பாடு மீறப்பட்டு புலிக்கொடி ஏற்றப்பட்டமையாலேயே படையினர் ஆத்திரம் அடைந்து சோதனைச் சாவடியை மூடியதுடன், கெடுபிடிகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (01)

# கங்கூலி - சப்பல் பிரச்சினை சுமுகத் தீர்வு காணப்பட்டதா?






பெங்களூர் —

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் கங்கூலிக்கும், பயிற்சியாளர் கிரேக் சப்பலுக்குமிடையிலான மோதல் பற்றி விசாரணை நடத்த கடந்த 27ஆம் திகதி மும்பையில் இந்திய கிரிக்கெட் சபை ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கங்கூலியும், சப்பலும் ஆஜரானார்கள்.

முதலில் ஆய்வுக்குழுவினர் முன்பு இருவரும் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். பின்பு கங்கூலியும், சப்பலும் தனி அறையில் உட்கார வைக்கப்பட்டனர். இருவரும் மனம் விட்டுப் பேசுங்கள் என்று விசாரணைக் குழுவினர் கேட்டுக் கொண்டனர்.

அதன்பின்பு இருவருக்கும் சமாதானம் ஏற்பட்டுவிட்டது. இனி ஒருவரையொருவர் தாக்கிப் பேசமாட்டார்கள். அவரவர் பதவியில் நீடிப்பார்கள் என்று கிரிக்கெட் சபைத் தலைவர் மகேந்திரா அறிவித்தார்.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் கிரேக் சப்பல் - பெங்களூர் விமானநிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் -

அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து தான் திருப்தி அடைவதாகப் பதிலளித்துள்ளார்.

கங்கூலியுடன் உங்களுக்கு ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்துவிட்டதா? என்ற கேள்விக்குப் பதிலளிக்க சப்பல் மறுத்துவிட்டார். இந்த விடயங்களை உங்களுடன் விவாதிப்பதற்கு எங்களை இந்திய கிரிக்கெட் சபை அனுமதிக்காது என்று கூறிவிட்டு காரில் அமர்ந்து வேகமாகப் புறப்பட்டுச் சென்றார்.

மும்பையில் நடந்த ஆய்வுக்குழுக் கூட்டத்தில் கங்கூலியும், சப்பலும் கலந்துகொண்டபோது, தனியாகச் சந்தித்துப் பேசினார்கள் என்றும், எண்ணங்களை வெளிப்படுத்தி சமாதானமாகிவிட்டார்கள் என்றும், சிரித்துக்கொண்டே வெளியே வந்தார்கள் என்றும் பலதரப்பட்ட தகவல்கள் வெளியாகின.

இருவரும் சமரசமாகிவிட்டார்கள் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கும்போது சண்டை தீர்ந்துவிட்டதா? என்று கேட்ட கேள்விக்கு ஆம் என்று பதில் சொல்ல மனம் இல்லாமல், சப்பல் போனமை இன்னமும் சந்தேகத்தைக் கிளறிவிட்டிருக்கிறது.

# தெல்லிப்பளைக் கோட்ட உதைபந்தாட்டப் போட்டிகள்

மல்லாகம் —

தெல்லிப்பளை கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நாளை ஆரம்பாகவுள்ளன. மகாஜனக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் போட்டிகளில் -

அளவெட்டி அருணோதயா கல்லூரியை எதிர்த்து மல்லாகம் மகாவித்தியாலயமும், அருணோதயா கல்லூரியை எதிர்த்து மல்லாம் மகாவித்தியாலயமும், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தை எதிர்த்து அருணாசலம் வித்தியாலயமும் மோதவுள்ளன.

பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும் போட்டிகளில் -

யூனியன் கல்லூரியை எதிர்த்து அருணாசலம் வித்தியாலயமும், யூனியன் கல்லூரியை எதிர்த்து குட்டியப்புலம் மகாவித்தியாலயமும், யூனியன் கல்லூரியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயமும் மோதவுள்ளன.

அருணோதயா கல்லூரி மைதானத்தில் நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறும் ஆட்டங்களில் -

மகாஜனக் கல்லூரியை எதிர்த்து குளமங்கால் றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயமும், கட்டுவன்புலம் வித்தியாலயத்தை எதிர்த்து குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும், யூனியன் கல்லூரியை எதிர்த்து மயிலிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும் மோதவுள்ளன.


அதே மைதானத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு -

குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தை எதிர்த்து மல்லாகம் மகாவித்தியாலயமும், வசாவிளான் மகாவித்தியாலயத்தை எதிர்த்து மயிலிட்டி றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயமும், மல்லாகம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து வசாவிளான் மகாவித்தியாலயமும் மோதவுள்ளன.

(72)

## விளையாட்டு

# இந்தியாவுக்குச் செல்லும் இலங்கை அணி அறிவிப்பு



கொழும்பு —

இந்தியாவுக்கு எதிராக விளையாட இருக்கும் இலங்கை அணி வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி அடுத்த மாத இறுதியில் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்கிறது. இதற்கான 20 பேர் கொண்ட இலங்கை உத்தேச அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

இலங்கை உத்தேச அணி விபரம் - அத்தபத்து (கப்டன்), ஜெயசூரிய, சங்கஹார, டில்ஷான், சமரவீர, உபுல் தரங்க, ஆர்னோல்ட், குணவர்த்தன, முரளிதரன், ஹேரத், டில்ஹார பெர்னாண்டோ, மலிங்க பண்டார, சந்தன, வாஸ், லசித் மலிங்க, சஜீவா வீரக்கோன், மஃரூப், சொய்சா, டில்ஹார லொக்கு ஹெட்டி.

இலங்கை அணி, ஒக்ரோபர் 25ஆம் திகதி முதல் இந்தியாவில் 7 ஒருநாள் போட்டிகள், அதனைத் தொடர்ந்து 3 டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது.

இப்போது அறிவிக்கப்பட்டுள்ள 20 வீரர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு, அதன் பின்பு இறுதியாக 15 வீரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இந்திய அணிக்கு பெரும் சவாலாக இருக்கக்கூடிய அளவுக்கு இலங்கை அணி தயார் செய்யப்படவுள்ளது.

# ஆஷஸில் இழந்த பெருமையை சுப்பர் சீரிஸில் நிச்சயம் மீட்போம்

## சபதம் செய்கிறார் பொண்டிங்



சிட்னி —

சுப்பர் சீரிஸ் கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக ஆடி இழந்த பெருமையை மீட்போம் என்று அவுஸ்ரேலிய அணியின் கப்டன் ரிக்கி பொண்டிங் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரை இழந்ததன் மூலம் ரசிகர்களிடையே அதிருப்தி எழுந்தது. ஆஷஸ் தொடரில் இழந்த பெருமையை சுப்பர் சீரிஸ் கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக ஆடி வெற்றி பெற்று மீட்போம்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியிலும் நாங்கள்தான் தலைசிறந்த அணியாக உள்ளோம். தற்போதும் எங்கள் அணிதான் முதலிடத்தில் உள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

சுப்பர் சீரிஸ் போட்டியில் உலக அணியை எதிர்கொள்ள நீண்ட காலமாக எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

மற்றைய அணியினரைவிட அவுஸ்ரேலிய அணியினர் ஒருங்கிணைந்து ஆடுவதில் கில்லாடிகள். இது எங்கள் அணிக்கு கூடுதல் பலமாகும். ஆஷஸ் டெஸ்டின் தோல்வி காரணமாக பயிற்சியாளர் ஜோன் புச்ஷானனை குறைகூறக்கூடாது. அவரது பயிற்சியின் கீழ்தான் அவுஸ்ரேலிய அணி அதிக வெற்றிகளைக் குவித்துள்ளது. எனவே, அவரைக் குறைத்து மதிப்பிடக்கூடாது.

என்னுடைய ஆதரவு எப்பொழுதுமே அவருக்கு உண்டு. இவ்வாறு ரிக்கி பொண்டிங் கூறினார்.

# ஐ.சி.சி. விருதுப் பட்டியலில் 4 இந்திய வீரர்கள் நீக்கம்!



புதுடெல்கி —

ஐ.சி.சி. விருது பெறுவோர் பட்டியலிலிருந்து இந்திய வீரர் ராவிட், ஹர்பஜன் சிங், கும்ளே, ஷேவாக் ஆகியோரின் பெயர் நீக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவில் உள்ள சிட்னி நகரில் அடுத்தமாதம் 11ஆம் திகதி ஐ.சி.சி. விருது வழங்கும் விழா நடைபெறவுள்ளது. இதில் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்காக விருதுபெறுவோரின் உத்தேச பட்டியல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் இந்திய வீரர்கள் ராவிட், ஷேவாக், கும்ளே, ஹர்பஜன் சிங், தினேஷ் கார்த்திக் ஆகியோருடைய பெயர்கள் இடம்பெற்றிருந்தன.

ஆனால், சமீபகாலமாக இந்திய அணி மோசமாக விளையாடி வருகிறது. இலங்கையில் நடந்த முத்தரப்பு போட்டி, சிம்பாப்வேயில் நடந்த முத்தரப்பு போட்டி ஆகியவற்றில் இந்திய அணி கிண்ணத்தைக் கோட்டை விட்டது. இதனால் இந்திய அணியின் மதிப்பு சர்வதேச அரங்கில் கீழே போய்விட்டது.

நேற்றுமுன்தினம் ஐ.சி.சியில் இருந்து தெரிவுக் குழுவினர் உத்தேசப் பட்டியலில் இருந்து சில வீரர்களுடைய பெயரை நீக்கி, புதிய பட்டியலை வெளியிட்டது. அதில் இந்திய வீரர்கள் 4 பேரின் பெயர் நீக்கப்பட்டுவிட்டது. அவர்கள் சமீபகாலமாகச் சிறப்பாக விளையாடாததே இதற்குக் காரணமாகும்.

நீக்கப்பட்டவர்கள் பட்டியலில் ராவிட், ஷேவாக், கும்ளே, ஹர்பஜன் சிங் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு ராவிட் சிறந்த ஒருநாள் போட்டி வீரர், சிறந்த டெஸ்ட் போட்டி வீரர் என 2 விருதுகளைத் தட்டிச் சென்றார். இர்பான் பதான் சிறந்த வளரும் வீரர் விருதைப் பெற்றார்.

அவுஸ்ரேலிய வீரர் கில்கிறிஸ்ட் தற்போதுள்ள உத்தேச பட்டியலில் 3 விருதுக்கான போட்டியில் உள்ளார். சிறந்த ஒருநாள் போட்டி வீரர், சிறந்த டெஸ்ட் வீரர், இந்த ஆண்டின் சிறந்த வீரர் என 3 விருதுகளுக்கு அவர் போட்டியிடுகிறார். அவற்றுக்கான உத்தேச பட்டியலில் இருக்கும் ஒரே வீரர் இவர்தான்.

இந்த ஆண்டின் சிறந்த வீரர் விருதுக்கான போட்டியில் கில்கிறிஸ்டுடன் பிளின்ரொப், இன்சமாம், கலிஸ், மக்ரா ஆகியோரும் உள்ளனர்.

உத்தேசப் பட்டியலில் உள்ள வீரர்கள் வருமாறு -

வளரும் வீரர் : தினேஷ் கார்த்திக் (இந்தியா), பீற்றர்சன் (இங்கிலாந்து), வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), இயன் பெல் (இங்கிலாந்து), அப்ரப் அகமட் (பங்களாதேஷ்).

ஒருநாள் போட்டி வீரர் : கில்கிறிஸ்ட், பிரட் லீ, சைமன்ஸ் (அவுஸ்ரேலியா), பிளின்ரொப், பீற்றர்சன் (இங்கிலாந்து).

டெஸ்ட் வீரர் : கில்கிறிஸ்ட், மக்ரா, வோன் (அவுஸ்ரேலியா), இன்சமாம் (பாகிஸ்தான்), கலிஸ் (தென்னாபிரிக்கா).

# தேசிய பூப்பந்தாட்டப் போட்டிக்கு தெரிவான வீர, வீராங்கனைகள்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டப் பூப்பந்தாட்டச் சங்கம், வர்த்தக வங்கி, இலங்கை பூப்பந்தாட்டச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் கனிஷ்ட, தேசிய பூப்பந்தாட்டப் போட்டியை நடத்தியது.

இதில் 1ஆம், 2ஆம் இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் கொழும்பில் இலங்கை பூப்பந்தாட்டச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள கனிஷ்ட, தேசிய பூப்பந்தாட்டப் போட்டி 2005இல் பங்குபற்ற உள்ளனர்.

யாழ்.மாவட்ட போட்டிகளில் வெற்றிபெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவான வீர, வீராங்கனைகள் வருமாறு -

ஆண்கள் :

11 வயது ஒற்றையர் - 1.எம்.ஆகாஷன் (யாழ்.மத்திய கல்லூரி), 2. ஜி.ஏ.அனோஜன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி)

இரட்டையர் - 1.எம்.ஆகாஷன் (யாழ்.மத்திய கல்லூரி), ஜி.ஏ.அனோஜன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி). 2. ஆர்.டீன் ஒஸ்பேட் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), பி.நிரோஜன் (யாழ்.மத்திய கல்லூரி).

13 வயது ஒற்றையர் - 1.ஆர்.எச். சொலமன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), 2.பி.ஜெனிவர் (யாழ்.மத்திய கல்லூரி).

இரட்டையர் - 1.ஆர்.டீன் ஜெனிவேட் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஜெ.அமிடயன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி). 2. ஆர்.எச்.சொலமன், பி.ஜெனிவர்.

15 வயதின்கீழ் ஒற்றையர் - 1.ரி.துஷாந்தன் (உடுவில் மான்ஸ் பாடசாலை), 2.எம்.அமிழ்தன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

இரட்டையர் - 1.ரி.துஷாந்தன், எஸ்.றெஜினோல்ட் (உடுவில் மான்ஸ்), 2. எம்.அமிழ்தன், டி.ரிஷியந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி).

17 வயதின்கீழ் ஒற்றையர் - 1.எல்.றெமின்சன் (உடுவில் மான்ஸ்), 2. எஸ்.வல்லவக்குமரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

இரட்டையர் - எஸ்.உமாதரன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.வல்லவக்குமரன். 2.என்.சனேந்திரா (சென்.ஜோன்ஸ் கல்லூரி), கே.சாமிலன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

19 வயது ஒற்றையர் - 1.எஸ்.ரம்யராகுலன் (கொக்குவில் இந்து), 2. ஆர்.சாருஜன் (யாழ்.இந்து).

இரட்டையர் - 1.ரம்யராகுலன், ஜெ.சுஜீவன் (யாழ்.இந்து). 2. எம்.குகதீபன் (யாழ்.இந்து), ஆர்.சாருஜன்.

பெண்கள் -

11 வயது ஒற்றையர் - 1.எம்.ஜோய் காருண்யா (ஜோன்ஸ் பொஸ்கோ), 2. எச்.ஆர்.நடாஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

இரட்டையர் - 1.எம்.ஜோய் காருண்யா, எச்.ஆர்.நடாஷா, 2. எஸ்.பிரியங்கா (உடுவில் மான்ஸ்), எம்.ஜகிலா (உடுவில் மான்ஸ்).

13 வயது ஒற்றையர் - 1.ஜெ.ஜெனித்தா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) 2. ஜெ.லக்ஷி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

இரட்டையர் - 1.ஜெ.ஜெனித்தா (சுண்டுக்குளி மகளிர்), எஸ்.மயூரிக்கா (சுண்டுக்குளி மகளிர்) 2. ஜெ.லக்ஷி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), வி.சரண்யா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

15 வயது ஒற்றையர் - 1.ஜெ.டென்சிகா (உடுவில் மான்ஸ்), 2. சி.பெனிஸ்லா (உடுவில் மான்ஸ்).

இரட்டையர் - 1.ஜெ.டென்சிகா (உடுவில் மான்ஸ்), எஸ்.நிஷாந்தினி (உடுவில் மான்ஸ்) 2.சி.பெனிஸ்லா (உடுவில் மான்ஸ்), எம்.சகிலா (உடுவில் மான்ஸ்).

17 வயது ஒற்றையர் - 1. ஏ.கீர்த்திகா (சுண்டுக்குளி மகளிர்) 2. ஜெ.மடோனா (சுண்டுக்குளி மகளிர்).

இரட்டையர் - ஏ.கீர்த்திகா (சுண்டுக்குளி மகளிர்), ஜெ.மடோனா (சுண்டுக்குளி மகளிர்) 2. ஆர்.நிஷாந்தினி (சுண்டுக்குளி மகளிர்), ரி.மதுரந்தி (சுண்டுக்குளி மகளிர்).

19 வயது ஒற்றையர் - 1.ஜெ.குயின்சிகா (உடுவில் மானிஸ்), 2. எஸ்.சிந்துஜா (உடுவில் மான்ஸ்).

# மார்பு நோய் சிகிச்சை நிலையம் நேற்றுமுன்தினம் பண்ணையில் திறப்பு





யாழ்ப்பாணம்

உலக வங்கியின் நிதியுதவியுடன் மீளக்கட்டடப்பட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையமும், பிராந்திய மருந்துக் களஞ்சியமும் நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு பண்ணையிலுள்ள சுகாதாரக் கிராமத்தில் திறந்துவைக்கப்பட்டது. உலக வங்கியின் சிரேஷ்ட அதிகாரி கலாநிதி நரேந்திரன்துரைசுவாமி சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வு யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினர்களாக - உலக வங்கியின் சிரேஷ்ட அதிகாரி கலாநிதி நரேந்திரன் துரைசுவாமியும், வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி எஸ்.குமாரவேற்பிள்ளையும், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸும், வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரதிப் பிரதம செயலாளர் கே.மகாலிங்கமும், உலக வங்கியின் சிரேஷ்ட அதிகாரி என்.மெயின்றா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கிய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி ஆ.கேதீஸ்வரனும், வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி எஸ். குமாரவேற்பிள்ளையும், உலக வங்கியின் சிரேஷ்ட அதிகாரி கலாநிதி நரேந்திரன் துரைசுவாமி ஆகியோர் உரையாற்றினார்கள்.

# ஸ்கிறபிள் சங்கம் அங்குரார்ப்பணம்!

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, யாழ். மாவட்ட ஸ்கிறபிள் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இலங்கை ஸ்கிறபிள் லீக்கின் தலைவர் வைத்திய நிபுணர் எல்.எம்.அமரசிங்க கலந்து சிறப்பித்தார். யாழ்.மாவட்ட ஸ்கிறபிள் சங்கத்தின் தலைவராக அ.சிறிகுமாரனும், உபதலைவர்களாக திருமதி. கே.பொன்னம்பலம், திருமதி து.துஷிதாரன், எல்.ஓங்காரமூர்த்தி ஆகியோரும் - செயலாளராக லெஸ்லியும், உபசெயலாளராக பரராஜசிங்கமும் - சுற்றுப்போட்டிகளுக்கான செயலாளராக அன்ரன் ஜெயராஜ், பொருளாளராக திருமதி.பு.சுபாகரன், பத்திராதிபராக ஆர்.கணபதிப்பிள்ளை ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

ஆலோசனைச் சபை அங்கத்தவர்களாக அருட்திரு.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், அருட்திரு. ஞான பொன்றாஜா, பி.விக்னேஸ்வரன், என்.ஏ.விமலேந்திரன், எஸ்.தனபாலசிங்கம், எஸ்.சுந்தரேஸ்வரன், கே.ராசதுரை, வே. கருணாநிதி, வைத்தியகலாநிதி அமரசிங்க, றொகான் ராஜசிங்கம், எஸ்.ஜெயராஜசிங்கம், பொ.மகேஸ்வரன் பேராசிரியர் மெறில்பெரேரா மற்றும் சிறானிமில் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நவராத்திரி பூஜை

சாவகச்சேரி

எதிர்வரும் நவராத்திரி தினத்தை முன்னிட்டு சரசாலை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்தில் தினமும் காலை சங்காபிஷேகமும், மாலை ஸ்ரீ சக்கர பூஜையும், சுவாமி வீதிவலம் வருதலும் இடம்பெறும். கிரியைகள்யாவும் சிவஸ்ரீ சி.கிருபாகரக்குருக்கள் தலைமையில் இடம்பெறும். (24)

# தெல்லிப்பளை கோட்ட - பாடசாலைகளின் சிறுவர், முதியோர் தின போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு -தெல்லிப்பளை கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரங்கள் வருமாறு-

**கவிதை - முதியோர் தினம்**

பிரிவு I

சௌ.பிரணவன் - யூனியன் கல்லூரி தெல்லிப்பளை.

பிரிவு II

1ஆம் இடம் - தி.டிலக்சனா (இளவாலை மெய்கண்டான் ம.வி), 2ஆம் இடம் - ப.பிரியதர்சினி (கீரிமலை நகுலேஸ்வர ம.வி), 3ஆம் இடம் - த.நிரோஜா (யூனியன் கல்லூரி)

பிரிவு III

1ஆம் இடம் - ச.தீசன் (யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை), 2ஆம் இடம் (ந.கோபிநாத் - இளவாலை மெய்கண்டான் ம.வி).

**கட்டுரை -முதியோர் தினம்**

பிரிவு I

1ஆம் இடம் - சி.சாளினி (மல்லாகம் மகாவித்தியாலயம்) 2 ஆம் இடம் - ஜெ.கௌதமன் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி) 3 ஆம் இடம் - பு.கீர்த்தி (மல்லாகம் மகா வித்தியாலயம்)

பிரிவு III

1ஆம் இடம் (து.டயிதா - இளவாலை மெய்கண்டான் ம.வி) 2 ஆம் இடம் யோ.காயத்திரி (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி)

**சிறுவர் தினம் - கவிதை**

பிரிவு I

1ஆம் இடம் - சுதாங்சன் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி).

பிரிவு II

1ஆம் இடம் - சி.கோசலா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி) 2 ஆம் இடம் - ஆ.நிறைசெல்வி (மல்லாகம் மகாவித்தியாலயம்)

**சிறுவர் தின - கட்டுரை**

பிரிவு I

1ஆம் இடம் - த.கிரிசாந் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), 2 ஆம் இடம் - றே.றொனால்ட் (மயிலிட்டி றோ.க), 3ஆம் இடம் - சி.நிசாந்தி (மயிலிட்டி றோ.க)

பிரிவு II

1ஆம் இடம் - பா.லோகதுர்காயினி (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), 2 ஆம் இடம் - அ.அர்ச்சனா (மல்லாகம் மகாவித்தியாலயம்), 3ஆம் இடம் - சு.கோபிகா (அளவெட்டி அருணாசலம்)

பிரிவு III

1ஆம் இடம் - ம.மதுரா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி. ஆகிய மாணவர்களே இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களாவர். (101)

# இடம்பெயர்ந்தோர் நிவாரணத்தை ஒக்ரோபர் 5 இற்கு முதல் வழங்குக

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து ப.நோ.கூ.சங்கங்கள் மூலம்- இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான ஜூன் மாத இலவச உலருணவு விநியோகம் எதிர்வரும் 5ஆம் திகதிமுதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, யாழ். செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள ப.நோ. கூ.சங்கங்கள் இந்த மாதத்துக்குரிய வழங்கற்கட்டளைகளை யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் இன்று பெற்று, விநியோக நடவடிக்கைகளை எதிர்வரும் 5ஆம் திகதி முதல் ஆரம்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களுக்கான ஜூலை மாதம் வரை (புள்ளிகள் 50, 52) வழங்கற் கட்டளைகள் வழங்கப்பட்டுவருகின்றன. இவற்றைப் பெற்று, விநியோக நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் இலவச நிவாரணங்களுக்குரிய பயனாளிகள் காலதாமதமின்றி உரிய ப.நோ. கூ.சங்கங்களில் பொருட்களை பெற்று, ஒத்துழைக்கு மாறும் மாவட்ட செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# சமூக மேம்பாட்டு அறிவியல் கருத்தரங்கு!

சண்டிலிப்பாய்

வட்டு.கிழக்கு ஜனசக்தி சனசமூக நிலையமும், விநாயகர் கிராம நல்லொழுக்க சிக்கனக் கடன் கூட்டுறவுச்சங்கமும் இணைந்து நடத்தும் 'சமூக மேம்பாட்டு அறிவியல் கருத்தரங்கு தொடரின் ஏழாவது நிகழ்வு' நாளைகாலை 9.30 மணிக்கு ஜனசக்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் கு.மணிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் சீ.ர.மோகன்றாஸ், பிரதம விருந்தினராகவும் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க சமாச தலைவர் சு.சிவ சுப்பிரமணியம், வட்டு.கிழக்கு பிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் சி.இராசலிங்கம், சிக்கன கூட்டுறவுச்சங்க பிராந்திய சபைத் தலைவர் வி.செல்வரத்தினம் ஆகியோர் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் விவசாயம் தொடர்பான விரிவுரைகள், சமூகமேம் பாட்டு நல்லொழுக்கம், சமூக அபிவிருத்தி சிக்கன கடன் கூட்டுறவுச்சங்கத்தின் பங்கு தொடர்பான கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன. (48)

# மாகாண மட்ட ஆங்கில தின போட்டிகள்

யாழ்ப்பாணம்

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மாகாணமட்ட ஆங்கிலதினப் போட்டிகள் - நாளையும், நாளை மறுதினமும் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

அதில் 2004 ஆம் ஆண்டுக்கான போட்டிகள் 1 ஆம் திகதியும், இந்த ஆண்டுக்கான போட்டிகள் 2 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இதில் 2004 ஆம் ஆண்டுப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் இன்று மாலை 3 மணிக்கும், 2005 ஆம் ஆண்டுக்கான போட்டியில் பங்குபற்றுபவர்கள் நாளை 3 மணிக்கும் திருகோணமலை சென் மேரிஸ் கல்லூரியில் தமது வரவைப் பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (12)

# கடற்தொழிலாளர் சம்மேளனத்தினர் நெடுந்தீவுக்கு விஜயம் செய்தனர்!



நெடுந்தீவு

நெடுந்தீவில் இயங்கிவரும் சுனாமியால் பாதிக்கப்பட்ட கண்ணாடி இழைப்படகுகள் திருத்தக செயற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக நோர்வே கடற்தொழில் சம்மேளனத் தலைவர் குணால் அல்பம் தலைமையிலான குழு ஒன்று கடந்த சனிக்கிழமை நெடுந்தீவுக்கு சென்றார்.

சம்மேளனத் தலைவர் ஏ.ஜே நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பாளர் கே.தர்மசீலன், வடக்கு மாகாண இணைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், எம். தயாளன் ஆகியோர் அடங்கிய குழுவினரே செயற்பாடுகள் தொடர்பாக ஆராய சென்றனர்.

கடற்தொழில் சங்கப் பிரதிநிதிகளையும், படகு திருத்தும் நிலையத்தில் சந்தித்து கலந்துரையாடினர். சுனாமியின் போது சேதமடைந்த வலைகளுக்கு பதிலாக, புதிய வலைகள் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் இது தொடர்பான பட்டியலை கடற்தொழிலாளர் சங்கத்தில் சமர்ப்பிக்குமாறும் கோரினர்.

அத்துடன், நெடுந்தீவில் சேதமான சுமார் 190 படகுகளும் திருத்தம் செய்யப்படும்வரைக்கும் கண்ணாடி இழைப்படகு திருத்தும் நிலையம் தொடர்ந்து இயங்கும் எனவும் நோர்வே கடற்தொழில் சம்மேளன தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை இதுவரைகாலமும் படகின் அடித்தள வேலைகளுக்கு மரப்பலகைகள் வழங்கப்பட்டு வந்த போதும், தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாக பயனாளிகள் தெரிவித்தபோதும், அதனையும் நாளடைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதிபட அவர் தெரிவித்தார். (113)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : கே.சாளினி
முகவரி : பலாலி கிழக்கு.

### அகவை ஐந்து



பெயர் : வி.யூட்அபிசேக்
முகவரி : பாஷையூர்.

### அகவை பத்து



பெயர் : ந.கிருஷாந்
முகவரி : ஏழாலை மேற்கு.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------
முகவரி : ----------
பிறந்த ஆண்டு: ----------

சுயப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்






# குழந்தை பாலுக்கு அழுதால்...

இயற்கையில் எந்தவொரு தாய்க்கும் தாய்ப்பால் சுரக்காமல் போகும் நிலை ஏற்பட வாய்ப்பே இல்லை. குழந்தை பிறந்தால் பால் சுரந்தே தீரவேண்டும். இது ஒரு மாதிரியான சுழற்சி முறையில் வரக்கூடிய விடயம். அதற்காக நாம்தான் பொறுமையாகக் காத்திருக்கவேண்டும்.

"குழந்தை பசியால் அழுகிறதே... அதுவரைக்கும் எப்படிக்காத்திருப்பது" என்று சிலர் நினைப்பது பிரசவமாகி மூன்றுநாட்கள் வரை, எந்தவிதமான உணவும் இல்லாமல் இருக்க குழந்தையின் உடல் தயார்நிலையில்தான் இருக்கிறது. குழந்தையின் உடலிலேயே சேமித்து வைக்கப்பட்டுள்ள சத்துகளை, உணவு கிடைக்காத அந்த ஆரம்ப நாட்களில் குழந்தையின் உடல் தன்னால் இயங்கிக்கொள்ள முடியும்! அதுவரை நாமும் பெரிதாகக் கவலைப்படத் தேவையில்லை.

இது புரியாமல் பலர் குழந்தை அழுகிறது என்று சொல்லி, அதற்குக் கற்கண்டுத் தண்ணீரையோ அல்லது புட்டிப்பாலையோ கொடுத்துவிடுகின்றனர். இது தேவையில்லாதது. குழந்தைக்குத் தேவைப்படும்போது தாய்தான் பால் கொடுக்கவேண்டும். இயற்கையின் ஒழுங்கு. இடையில் நாம் புகும்போதுதான் எல்லாமே குளறுபடியாகிவிடுகிறது எப்படி?

குழந்தை அழுகிறது என்று நாம் கற்கண்டு நீர் அல்லது புட்டிப்பால் போன்றவற்றைக் குடிக்கக்கொடுக்க, குழந்தையும் திருப்தியாகி அழுகையை நிறுத்திவிடுகிறது. இப்படி நாம் தாய்ப்பாலுக்குப் பதிலாக வேறு பானங்கள் எதையோ கொடுப்பதால் குழந்தைக்குத் தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்க சந்தர்ப்பமே இல்லாமல் செய்துவிடுகிறோம். மேலும், தாய்ப்பால் இயற்கையில் இனிப்பில்லாமல் சப்பென்றுதான் இருக்கும். தாய்ப்பாலுக்குப் பதிலாக இனிப்பானதொரு விடயம் கிடைத்துவிடுவதால் குழந்தை, சுவைக் காரணமாகக்கூட தாய்ப்பாலை நிராகரித்துவிடும் வாய்ப்புள்ளது.

இதில் இன்னொரு விடயமும் இருக்கிறது. தாயின் மார்பிலிருந்து குழந்தை உறிஞ்ச உறிஞ்சத்தான் பால் கொஞ்சம் கொஞ்சமாகச் சுரக்கும். புட்டிப்பால் போத்தலிலுள்ள நிப்பிளில் துளை பெரிதாக இருப்பதால் ஒரு முறை உறிஞ் சும்போதே, குழந்தைக்கு அதிகப்படியாகப் பால் கிடைத்து விடுகிறது. எளிதாகவும், அதேசமயம் இனிப்பாகவும் பால் கிடைத்துவிடுவதால், குழந்தை புட்டிப் பாலையே அதிகம் விரும்பி, தாய்ப்பால் குடிப்பதைப் பெரும்பாலும் தவிர்த்து விடும். பிறகெப்படித் தாய்க்குத் தொடர் ந்து பால் சுரக்கமுடியும்?

அழும் குழந்தையை எப்படித்தான் சமாதானப்படுத்துவது என்றுதானே கேட்கிறீர்கள். பிறந்த குழந்தை சிறிது நேரம் அழுதால், தவறொன்றும் இல்லை. தொடர்ந்து அதிகநேரம் அழுது கொண்டே இருந்தால் மட்டும் குழந்தையை மருத்துவரிடம் காட்டலாம்.

# குழந்தை வளர்ப்பில் பெற்றோரின் பங்கு



குழந்தை பிறக்கும்போது களிமண் போல பெற்றோருக்குக் கிடைக்கிறது. அதை எப்படி உருவாக்க வேண்டும் என்பது பெற்றோர் கையில் தான் இருக்கிறது. கருவை வயிற்றில் சுமக்கும் போதே குழந்தையின் அறிவு வளர்ச்சி தொடங்கி விடுகிறது. குழந்தைகளின் உடல் நலனில் ஆர்வம் காட்டும் பெற்றோர், அவர்களின் அறிவு வளர்ச்சியிலும் அதிக ஆர்வம் காட்டவேண்டும்.

குழந்தை தன்னிச்சையாகச் செயல்படுவதைத் தான் விரும்புகிறது. பெற்றோர் அவ்வாறு இருக்க அனுமதிப்பதில்லை. இதனால் சமுதாயத்துடனான உறவு நிலைகளில் குழந்தை பின்தங்கியு உள்ளது. சில குழந்தைகளின் பெற்றோர் தொலைக்காட்சி பார்க்கக்கூட விடாமல் தொந்தரவு செய்கின்றார்கள். புதியவர்கள் யாரையேனும் பார்த்தால் பயந்து பெற்றோருடனேயே ஒட்டிக்கொள்கின்றார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன? குழந்தை பிறந்தது முதல் தங்களைச் சார்ந்தே வளரும்படி வளர்த்து விடுகின்றனர் பெரும்பாலான பெற்றோர்.

வீதியில் போகும் போது கூட அம்மாவும், அப்பாவும் குழந்தையின் கையை ஆளுக்கொரு பக்கம் பிடித்தபடி செல்கின்றனர். இந்தப் பிடியிலிருந்து விடுபட குழந்தை தவியாய்த் தவிக்கிறது. பஸ்சில் அடிபட்டுவிடுமே என் நீங்கள் பதறுகிறீர்கள். குழந்தைகளை அதன் போக்கில் செல்லவிடுங்கள்... அதற்குரிய ஆலோசனைகளை குழந்தைக்குப் புரியும் படியாக விளக்குங்கள்.

ரயில் தண்டவாளம் அருகில் ஏராளமான வீதிகள் இருக்கின்றன. அவர்கள் குழந்தைகளின் கையைப்பிடித்து அழைத்துச் செல்வதில்லை. தாங்களாகவே அவை விளையாடுகின்றன. அந்தக் குழந்தைகளில் யாராவது ரயிலில் அடிபட்டு இறந்ததாக இருக்காது.

குழந்தைகள் சுதந்திரமாகத் தன்னிச்சையாகச் செயல்பட அனுமதியுங்கள். அதேநேரம் கண்காணிப்புடன் இருங்கள். இந்தச் சுதந்திரம்தான் குழந்தையின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக விளங்கி, அவர்களின் கற்பனைத்திறனை அதிகரிக்கும். தொலைக்காட்சியைத் தொடாதே என்று சொன்னால் அதை ஏதாவது செய்து உடைத்து வி கிறது. எதிர்மறையாகவே செய்கிறது. காரணம் என்ன? தொடக்கூடாத அளவுக்கு அதில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் தான். முதலில் அந்த குழந்தைகளுக்கு தொலைக்காட்சிப் பொம்மையை வாங்கிக்கொடுங்கள். விளையாட்டுப் பொருட்களை ஆய்வு செய்து அறிவை வளர்த்துக்கொள்ளும்.

இன்னும் சொல்லப்போனால் திருமணத்துக்கு முன்பே குழந்தை வளர்ச்சி தொடங்கி விடுகிறது என்று கூறலாம். எப்படி.......? குழந்தையின் பண்புகளை தீர்மானிப்பது நீங்கள் தான். சிறந்த அறிவு படைத்த மனைவியை தேர்ந்தெடுத்தால் பிறக்கும் குழந்தையை நல்ல அறிவுடன் வளர்க்க முடியும்.

பெர்னாட்ஷாவிடம் அழகான பெண் ஒருத்தி வந்து 'நீங்கள் அறிஞர். நான் அழகானவள். என்னைத் திருமணம் செய்து கொண்டால் உங்களுடைய அறிவும், என்னுடைய அழகும் சேர்ந்து அறிவும், அழகும் உடைய குழந்தை பிறக்கும் என்றாளாம். அப்போது பெர்னாட்ஷா வேடிக்கையாக, நீ சொல்வது எதிர்மறையாக நடந்தால் என்னவாகும்?' என்றாராம். எனவே மனைவியைத் தேர்வு செய்யும் போது அழகை வி அறிவுக்கே முக்கியத்துவம் கொடுங்கள். நன் படித்துள்ள மனைவியை தேர்ந்தெடுங்கள்.

இதன் மூலம் குழந்தை வளர்ப்பில் அத பண்புகளை இன்னும் மேம்படுத்த முடியும். குழ தையின் சந்தேகங்களுக்கு பதிலளித்து, அதன் அறிவு வளர்ச்சிக்கு துணைபுரிய வேண்டும். அப்போது தான் அதன் நுண்ணறிவு வளரும் குழந்தையின் நுண்ணறிவு 135 வீதம் இருந்தால், நல்ல அறிவுத் திறனுடைய குழந்தை. நுண்ணறிவு சராசரி 70 வீதம் இருந்தால் அல்லது 70இற்க்கும் குறைவு என்றால் அறிவுத்திறன் சாதாரணம்தான்.

குழந்தைப் பருவத்தில் எப்படிச் சேமிக்கலாம் என்றும் நன்னடத்தைகள் பற்றியும், சொல்லிக்கொடுக்க வேண்டும். எப்படிச் சொல்கிறோம் என்பது மிக முக்கியமானது. உங்கள் குழந்தைகள் நல்ல செயல்களைச் செய்யும் போது பாராட்டுங்கள், பரிசளியுங்கள். அதே நேரத்தில் தவறு செய்தால் தண்டிக்கத் தவறாதீர்கள். அந்த தண்டனை உடல் சார்ந்த தண்டனையாக இருக்கக் கூடாது. அதிக பாதுகாப்பும் கூடாது. அதிக சுதந்திரமும் கூடாது.

# வீட்டு வன்முறை – தடைச்சட்டம்




வீட்டு வன்முறை என்பது இன்று மறைக்கப்பட்ட சம்பவமாக நடந்து வருவதுடன், வீட்டின் அமைதியான மகிழ்ச்சியான சூழலை பாதிப்படையவும் செய்கிறது. வீட்டு வன்முறை பல வடிவங்களில் செயற்பட்ட போதிலும், இதன் பாதிப்பை அதிகமாக அனுபவிப்பவர்கள் பெண்களாகவே உள்ளனர். பல வடிவங்களில் உருவெடுக்கும் இந்த வன்முறைச் சம்பவங்கள் பெண்களை, சிறுவர்களை உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிப்படையச் செய்கின்றன. தமக்கு ஏற்படும் துன்பச் செயல்களை மனதோடு புதைத்து வைத்து கண்ணீரோடு வாழும் பெண்கள் பலர்! இவற்றை மேலும் பொறுக்க முடியாதவர்கள் சட்டத்தை நாடுகின்றனர்.

இன்று நாம் சந்திக்கும் எத்தனையோ குடும்பங்கள் மணவாழ்விலிருந்து பிரிந்து - மனைவி வேறு, கணவன் வேறு, பிள்ளைகள் வேறு எனப் பல துன்பங்களோடு வாழ்கின்றனர். தம் துயரங்களை வெளிக்காட்டாது வாழும் குடும்பங்களுக்கு இந்தச் சட்டம் மூலம் நியாயமான பரிகாரம் கிடைக்க வழி ஏற்படுமா? என்ற வினாஎம் முன்தோன்றினாலும், நிச்சயமாக இந்த வீட்டு வன்முறைச் சட்ட மூலம், வீட்டு வன்முறைகளை இயன்றளவு தடுப்பதற்கு உதவும் என்ற உறுதிப்பாடு உண்டு.

வீட்டு வன்முறையை தடுக்கும் நோக்கோடு தயாரிக்கப்பட்ட சட்ட வரைபு 2005 ஆகஸ்ட் 09 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டமை எமக்கு மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

பலதடவைகள் இந்தச்சட்ட வரைபு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, பின்தள்ளி வைக்கப்பட்ட நிலையில் மகளிர் அமைப்புகளின் இடைவிடாத அழுத்தம் காரணமாக இறுதியில் நாடாளுமன்றில் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது. இது வரவேற்கத்தக்க சட்ட மூலமாக இருந்த போதிலும், இதனைச் சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கு நாம் தயாராக செயற்பட வேண்டியது அவசியம். நாடாளுமன்றில் சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தாலும், மக்கள் இந்தச் சட்ட வரைபு பற்றி எவ்வளவு தூரம் அறிந்திருக்கின்றார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளது. பாதிக்கப்படும் ஒவ்வொரு பெண்ணும் இந்தச் சட்டத்தின் பூரண பயன்பாட்டை பெற்றுக் கொள்ள முடியுமா? இவை மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

இந்தச் சட்டமூலம் எவ்வாறான செயற்பாடுகளை வீட்டு வன்முறையாக கொள்கின்றது என்பதை நோக்கின் - வீட்டுச் சூழலில் வசிக்கும் ஒரு நபர் வீட்டிலோ, வீட்டு உறவு தொடர்பாகவோ



வன்முறைக்குள்ளாகும் போது அல்லது வன்முறை தொடர்பாக தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற பயம் ஏற்படும் போது, இந்தச் சட்டத்தின் தேவையை நாட முடியும். வீட்டு வன்முறையைக் கூடுதலாக எதிர் கொள்வோர் பெண்களாக இருந்த போதிலும், பாதிக்கப்படும் பெண்கள் சட்டத்தை தமக்கு ஒரு நிவாரணியாகப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. சட்டத்தை நாடும்போது சட்டத்தரணியை நாட வேண்டும். பொலிஸ் நிலையம் செல்ல வேண்டும். இதற்கான உதவி, பணம் என்பன தேவை. இதனால் பாதிக்கப்படும் பெண்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட முன்வருவதில்லை. ஆகவே பாதிக்கப்பட்ட பெண்கள் சட்டத்தின் வழி நிவாரணம் பெறுவதற்கு பெண்கள் அமைப்புகள் மட்டுமல்ல சமூக மட்டத்தில் பலரும் முன்வரவேண்டும். இதன் மூலம் சமூகத்தில் பெண்களுக்குக் காட்டப்படும் பாராபட்சம், அநீதி என்பன விலகிப் போவதற்கு இடமுண்டு.

வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட ஒருவர் தன் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு மாவட்ட நீதிமன்றுக்கு இந்தச் சட்டத்தின் படி விண்ணப்பிக்க முடியும்.

காவல்துறை அலுவலகரும் பாதிக்கப்பட்ட ஒருவருக்காக விண்ணப்பிக்க முடியும். பாதிக்கப்பட்டவர் சிறுவராக இருப்பின், பெற்றோர் அல்லது சிறுவர் பாதுகாப்பு அதிகாரியால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் நீதிபதிக்கு பாதிக்கப்பட்ட நபர் சார்பாக விண்ணப்பத்தை அனுப்பலாம்.

வீட்டு வன்முறைகளை இரு பகுதியாகப் பகுக்கலாம். சம்பந்தப்பட்ட இரு நபர் கட்கிடையில் இடம்பெறும் உடல் ரீதியான அல்லது உளரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் வன்முறைகள் ஆயினும், உடல் ரீதியான வன்முறைகள் குற்றவியல் சட்டத்தின் 16 ஆம் பிரிவிலும் அடக்கப்பட்டுள்ளன.

இவையாவும் உடல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் வன்செயல்களாகும். இவ்வாறான வன்முறைகள் வீட்டுச் சூழலில் இடம்பெறும் போது இவை வீட்டு வன்முறைகளாகக் கொள்ளப்படும்.

சரோஜா சிவசந்திரன் M.A

தொடரும்.

# சுனாமி - ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

## (26 ஆம் அத்தியாயம்)

யாழ்ப்பாணம் என்ற பெயர்...! அதை நான் மலையில் வாழும்போது பல தடவைகள் கேட்டிருக்கிறேன்! எங்கடை மலையைப்போல இல்லையாம். பண்பாடான ஊராம். அம்மம்மா யாழ்ப்பணத்தைப் பற்றி அடிக்கடி குறிப்பிடுவாள். அவள் வாயில் அடிக்கடி வரும் பெயர்!... அது எனக்கு இன்னும் நன்றாய் நினைவில் நிற்கிறது! “உடுத்துறை”... இந்தப் பெயருடன் இன்னொரு பெயர்... ஓ... அதுவும் நினைவுக்கு வந்தது மருதங்கேணி!... நான் கண்ணாடியூடாக வெளியே பார்த்தேன்!... பச்சைப் பசேலென்ற வயல்கள்... கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒரே பசுமை... என்ன வளமான நிலம்!... கண்டக்டரின் குரல் என்னைத் திருப்ப வைத்தது.

“முறிகண்டிப் பிள்ளையார் கோவில் வந்திட்டுது!... எல்லாரும் இறங்கிக் கும்பிடவேணும்! இறங்குங்கோ!”

குரலில் இருந்த கண்டிப்பு... ஒரு வழிபாட்டுத் தலத்தை அனைவரும் வணங்கவேண்டுமென்ற கட்டளையாகத் தென்பட்டது. கண்ணகி என்னிடமிருந்து துளசியை வாங்கினாள். அது கண்களைத் திறந்து அழகாகக் கொட்டாவி விட்டது! அந்தச் சின்னமுகம்... அதில் எந்தக் கவலையின் ரேகையும் இல்லை. பூத்தமலர் போலப் பூரிப்பாய் இருந்தது.

பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கினோம்! கிணற்றடியில் முகங் கை கால்களைக் கழுவி சேலைத்தலப்பால் துடைத்துக்கொண்டு மரத்தடியில் வீற்றிருந்த பிள்ளையாரை வணங்கினோம்!

அப்பனே!... முறிகண்டியானே! ஒரு பிரச்சினையும் இல்லாமல் எங்களைக் கொண்டுவந்து சேர்த்துப் போட்டாய்!...

கண்டக்டரின் அந்த விநயமான குரல் அருகில் கேட்டது. கையில் தேங்காயுடன் கண்ணை மூடி வழிபடும் அந்த உருவம் பயணிகள் எல்லோருக்குமாய் வேண்டுதல் செய்யும் பண்பாடு... என்னை வியக்கவைத்தது. தேங்காயைச் சிதற அடித்த போது அதிலிருந்து இளநீர் என் முகத்தில் தெறிக்க... நினைவு சட்டென பின்னே ஓடியது. அன்று இளநீர்... தெறித்து... அது தொடர்ந்து... இன்று... தனியாளாய் நிற்கும் நிலை!...

பிள்ளையாரே!... என்னைச் சோதிக்காதே!... இஞ்சை புது இடத்துக்கு வெறுங்கையோட வந்து நிற்கிறன்!... என்ரை குஞ்சுகளை என்னோடு சேர்த்துவிடு... அப்பனே!...

மனம் உருக, கண்ணீர் பெருக அந்தப் பெரிய மருதமரத்தையும், பாலை மரத்தையும் மூன்றுமுறை சுற்றி வலம் வந்து கீழே விழுந்து வணங்கினேன்! குட்டானில் இருந்த திருநீற்றை நெற்றியிலே நிறையப் பூசி சந்தனக் கட்டையைக் கல்லிலே தேய்த்துப் பொட்டு வைத்துக்கொண்டு கண்ணகியைத் தேடினேன்! அவள் குரல் மறுபக்கத்திலிருந்து கேட்டது.

“என்னையே தேடுறாய்!... இஞ்சை நிக்கிறன்!... வா...!”


மனதால் பிள்ளையாரை மறுபடியும் வணங்கினேன்!... தெருவைக் கடந்து கண்ணகியிடம் சென்றேன்!...

“தேத்தண்ணி குடிக்சுப் போட்டுப் போவம்!”

துளசிக்குப் பால் போத்தலில் பால் குடிக்கக் கொடுத்துக்கொண்டிருந்த அவள் சொன்ன போதுதான் இரண்டு நாளாக நான் ஒன்றும் சாப்பிடாதது நினைவுக்கு வந்தது. வயிறு புகைந்துகொண்டிருந்தது. சரியென்று தலையாட்டினேன்!

“தம்பி 2 தேத்தண்ணியும் 2 வாய்ப்பனும் தா!”

கடைப்பையன் சொன்னகையோடு கொண்டு வந்து தந்தான்.



பாலை மரக் குற்றியில் குந்தியிருந்து நாங்கள் வாய்ப்பன் தின்ன துளசி பாலைச் சப்புக்கொட்டி ரசித்துக் குடித்துக் கொண்டிருந்து. வயிற்றுப் புகைச்சல் குறைய நான் கண்ணகியை நன்றியுடன் பார்த்தேன்!

“கொஞ்சம் பொறு இவளைக் காலிலை இருத்திப்போட்டு வாறன்!”

கண்ணகி சொன்னது எனக்கு விளங்கவில்லை. அவள் குந்தியிருந்து கால்களை மடக்கி அதில் துளசியை இருத்திப் பிடித்த போதுதான் எனக்கு விளங்கியது!... ஓ... பிள்ளை... ஆனந்தமாகச் சிரித்தபடி தன் உடல் உபாதையைத் தீர்த்துக்கொண்டிருந்தாள். ஐந்து நிமிடந்தான் கண்ணகி துளசியின் அரையையும், கால்களையும் கழுவித் துடைத்து விட்டு என்னிடம் தந்தாள். அந்த இடத்தைப் பூவரசம் குழைகளால் சுத்தம் செய்துவிட்டு, கைகால்களைக் கழுவிக் கொண்டு வந்தபோது யாழ்ப்பாணத்துப் பண்பாட்டை நான் உணர்ந்தேன். மலையில் வாழ்பவர்களுக்கு இப்படியொரு தூய்மைப்படுத்தும் பண்பாடு கிடையாது.

பஸ் ட்ரைவர் குரல் கொடுக்கவே எல்லோரும் போய் ஏறினோம்.

மீண்டும் பயணம் தொடங்கியது... கிளிநொச்சி வயல்... ஆனையிறவுக் கடல்... உப்பளம்... எல்லாம் விரைவாய்த் தாண்டி... கொடிகாமத்தில் பஸ் நின்றது.

“நாங்கள் இஞ்சை இறங்கவேணும்! இறங்கு... இந்த பையைக் கொண்டு வா!”

நான் சொன்னபடி செய்தேன்! பஸ் எங்களை இறக்கிவிட்டுப் புகை கக்கிய படி போய்விட்டது. நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். புதிய இடம் எல்லாம் கொஞ்சம் வித்தியாசமாய் இருந்தது. நாலைந்து தட்டி வான்கள் நின்றன. அதில் சனங்கள் ஏறி இருந்தனர்.

“நாங்களும் அந்த வானிலைதான் போகவேணும்!...”

சொல்லிக்கொண்டு கண்ணகி போனாள்! நானும் பின்னால் போனேன். இருவரும் ஏறினோம். ஏறியபின்புதான் எனக்கு விளங்கியது. இரண்டு பக்கம் மட்டுமே இருக்கலாம்! நடுவிலை ஒரே சாமான்கள். தேங்காய்ச்சாக்கு, மாங்காய்ச் சாக்கு, மரக்கறி, கோழிக்கரப்பு, பெட்டி, பாய், நாவற்பழம், மீன் கடகம், வாழைக் குலை... எனக்கு வியப்பாக இருந்தது. கண்ணகிதான் விளக்கினாள்.

“கொடிகாமம் சந்தையிலை சாமான் மலிவு!... இஞ்சை வந்து வாங்கிக்கொண்டு பருத்துறையிலை விக்கிறதுதான் வழக்கம். அங்கையிருந்து மீன் கொண்டுவந்து இஞ்சை விப்பினம்.”

“அப்ப நாங்கள் இப்ப யாழ்ப்பாணம் போகவில்லையே!...”

என் குரலில் இருந்த சோகம்!... கண்ணகிக்குச் சிரிப்பு வந்தது!...

“எடி விசரி இதுவும் யாழ்ப்பாணத்திலை ஒரு ஊர்தான்! இப்ப நாங்கள் தென்மராட்சியில நிக்கிறம்! இனி வடமராட்சிக்குப் போகப் போறம்!...”

“அப்ப பருத்துறை வடமராட்சியிலேதான் இருக்கோ”

நான் அவசரமாக இடைமறித்துக் கேட்டேன்!

“ஓம் அங்கதான் இருக்கு! எங்கடை இடம் துன்னாலை!...”

“கண்ணகி... !... பிள்ளையள் யாழ்ப்பாணம்தானே போனவையாம்!”

“நான் விசாரிச்சபோது மலையிலை சொன்னவை! முனையிலை இருக்கிற சிஸ்ரர்மார் நடத்திற இல்லத்துக்குக் கூட்டிக்கொண்டு போனவராம் பாதர்!”

“அப்ப அங்க என்னை அனுப்பி விடன்!”

“உனக்கு இஞ்சை இடம் ஒண்டும் தெரியாது!... நான் வீட்டை “போன பிறகு துளசியை அவரோடை விட்டிட்டு உன்னைக் கூட்டிக்கொண்டு போறன்!”

“பஸ்ஸிலை ஏத்திவிட்டால் நான் விசாரிச்சுக்கொண்டு போவன்!”

“கொஞ்சம் பொறடி! நான் கூட்டிக் கொண்டு போறன்!”

நான் ஒன்றும் பேசாமல் மௌனமாகி விட்டேன்! எனக்கு எரிச்சலாக இருந்தது. என்னை அங்கே அனுப்பலாம் தானே!... தட்டிவான் ஓடிக்கொண்டிருந்தது. பனங்கூடலுக்குள்ளே அது தன் பாட்டில் ஓட நான் ஒன்றையும் பார்க்காமல் தலையைக் குனிந்துகொண்டிருந்தேன்! கண்ணகி மெதுவாகத் துளசியை என் மடியில் இருத்தினாள். நான் என்னையறியாமலே துளசியை வாங்கினேன். அவளும் என்னிடம் தாவி வந்தாள். என் மடியில் எழும்பிநின்று என் கழுத்தை இரு கைகளாலும் வளைத்துப் பிடித்து என் முகத்தில் முத்தமிட்டாள்!... அந்தப் பால்மணம் நாறும் எச்சில் என் கன்னத்தில் பட்டவுடன் என் மன எரிச்சல் தணிந்துவிட்டது. அவளை இறுக்கிப் பிடித்து நானும் முத்தமிட்டேன்! அந்தச் சவலையின் முகத்தில் ஆயிரம் தாமரை மலர்கள் பூத்துக்கிடந்தன. அவள் கண்களில் ஆயிரம் சூரியப் பிரகாசம் தெரிந்தது. தாயை இழந்த துன்பத்தை உணராத இந்தப் பிஞ்சு என் ஏக்கத்தை எப்படிப் புரிந்துகொண்டது. என்னை எப்படித் தேற்றுகிறது!... குழந்தையற்ற கண்ணகியின் மடியில் தவழ வந்து பிறந்திருக்கிறதே! கண்ணகியின் உள்ளத்துக் கசப்பையெல்லாம் துடைத்து, அவளை மகிழ்விக்க... அவளையே தன் தாயாக ஏற்று மகிழும்... இந்த மனப்பக்குவம்! பெரியவர்களிடம் இல்லாத தெய்வீகம்!... குழந்தையும் தெய்வமும் ஒன்றுதான்! என் மனம் தேறியது!

“என்ன குழப்பம் நீங்கிவிட்டதா!”

கண்ணகியின் குரல் காதருகே கேட்டது.

“இவள் தெய்வம்தான்!... என் வேதனைக்கு ஏற்ற மருந்து தருகிறாள்!”

நான் சொன்னபோது கண்ணகி என்னைக் கூர்ந்து பார்த்தாள்!

“எனக்குப் பிள்ளையில்லை. என்ரை புரியன் இன்னொருத்தியோடை தொடர்பு வைத்து இவள் உருவானாள். இவள் பிறந்த செய்தி கேட்டபோது இவள் மீது எனக்கு வெறுப்பாயிருந்தது. ஆனால் பிறந்த ஆறாம் மாதமே தாயை இழந்து என் மடியில் வந்து விழுந்தபோது... நான் எல்லாவற்றையும் மறந்துவிட்டேன்! இப்ப இவளைவிட்டு என்னாலை இருக்க முடியாது!”

துளசி இப்போது கண்ணகியிடம் தாவினாள்! கண்ணகியும் அவளை ஆர்வத்துடன் வாங்கிக் கன்னத்தில் முத்தமிட்டாள்!

“என்னைக் கலிதீர்த்தே உலகில் ஏற்றம் புரிய வந்தாய்!” எப்போதோ படித்த பாரதியின் பாட்டு நினைவுக்கு வந்தது. இவளும் இப்படித்தான்!... நான் பரவசமாக அவளைப் பார்த்தேன். பல்லில்லாத பொக்கைவாய் கிழிய அவள் சிரித்தபோது நான் மெய்மறந்தேன்!...

“பருத்துறை வந்திட்டுது. எல்லோரும் இறங்குங்கோ!”


கண்டக்ரரின் குரல்... நாங்கள் மகிழ்வாய் இறங்கினோம்!... கண்ணகி சொன்னாள்!...

“அங்கை அவர்!... பஸ் நிலையத்துக்கே வந்துவிட்டார்!”

நான் நிமிர்ந்து பார்த்தேன்!... என் கண்கள் வியப்பால் விரிந்தன...!

(தொடரும்)

# குழந்தை பிறந்த பின் தசைகளை இயல்பு நிலைக்குக் கொண்டுவர இதோ சில எளிய பயிற்சிகள்



- ➤ உடற்பயிற்சியின் போது
- ➤ இருமும் போது
- ➤ தும்மும் போது
- ➤ சிலவேளைகளில் வாய்விட்டுச் சிரிக்கும் போதும்.

**இடுப்பு வளையத் தசைகளுக்கான பயிற்சியினை எவ்வாறு செய்வது?**

இந்தப் பயிற்சியினைச் செய்யும் போது, சரியான முறையில் செய்யக் கற்றுக் கொள்வதுடன், நேரத்துக்கு நேரம் சரியான முறையில் செய்கிறீர்களா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

1. கால்களை நேராக நீட்டி சற்று அகட்டிய வண்ணம் இருக்கவும். இப்பொழுது நீங்கள் உங்கள் மலவாயிலினூடாக வாயு வெளியேறுவதைக் கட்டுப் படுத்தப் போவதாகக் கற்பனை செய்யுங்கள். இதனைச் செய்வதற்கு உங்கள் பின்புற தசைகளை மலவாயிலினை நோக்கி இழுத்து பின் தளர்த்தவும். இவ்வாறு அசைக்கும் போது உங்களால் உணரக் கூடியதாக இருத்தல் வேண்டும். மற்றைய நேரங்களில் உங்கள் பின்புறத் தசைகளும், கால்களும் அசையாமல் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

2. இப்பொழுது நீங்கள் சலம் கழிப்பதாகக் கற்பனை செய்யுங்கள். உங்கள் சலப் பாய்ச்சலைக் கட்டுப்படுத்தப் போவதாக கற்பனை செய்யுங்கள் உண்மையாகவே கட்டுப்படுத்த முயற்சி செய்யுங்கள். இந்தக் குறிப்பை வாசிக்கும் பொழுதே செய்ய ஆரம்பியுங்கள். இதன் பொழுது பயிற்சி (1) இல் குறிப்பிட்ட தசைகளே உபயோகிக்கப்படுகின்றன. ஆனால் (1) விட சற்றுக் கடினமாக இருக்கும். 3. இதே போன்று, சிறுநீர் போய்க்கொண்டிருக்கும் போது திடீரென்று பாதியில் போவதை நிறுத்த முயற்சி செய்யுங்கள். அந்தச் சமயத்தில் இடுப்பென்பின் தசைகள் இறுக்கமடையும். மீண்டும் சிறுநீரை வெளியேற்றி திடீரென்று நிறுத்துங்கள். இதுபோல் தொடர்ந்து 4 அல்லது 5 தடவைகள் செய்யலாம். சிறுநீர் போகும் போது இறுக்கம் கொடுக்க நீங்கள் பழகிக் கொண்டால், பிறகு சாதாரணமாக இருக்கும் போதே இந்தப் பயிற்சிக்கு எங்கே இறுக்கம் கொடுப்பது என்பது உங்களுக்கு விளங்கும். இந்தப் பயிற்சியை நாளொன்றுக்கு 20-30 தடவைகள் செய்யலாம்.

04. நிமிர்ந்த நிலையில் உடலையும், கால்களையும் நீட்டியபடி படுக்கவும். பின்னர் வலது பக்க இடுப்பினை படுத்த நிலையில் இருந்து வயிற்றினை நோக்கி இழுக்கவும். இவ்வாறு மற்றப்பக்கத்துக்குமாக மாறிமாறி 5-10 தடவைகள் ஒவ்வோர் பக்கத்துக்குமாகச் செய்யவும்.

05. நேராக நின்று கொள்ளுங்கள் இப்பொழுது இரண்டு தொடைகளுக்கும் இடையே நல்ல தடிப்பான தலையணையை அல்லது பந்து ஒன்றை வைத்துத் தொடையால் அழுத்தம் கொடுத்துப் பிடித்தபடி நின்றல் வேண்டும். இப்போது தொடைகளால் எந்தளவுக்கு அழுத்தம் கொடுக்கமுடியுமோ அந்தளவுக்குக் கொடுங்கள். பிறகு தளரச் செய்யுங்கள். மீண்டும் மீண்டும் அழுத்தம் கொடுத்துத் தளரச் செய்யுங்கள். இதே போல் 20-30 தடவைகள் செய்யலாம். இந்தப் பயிற்சிக்கென்று குறிப்பாக நேரம் ஒதுக்கிவிடத் தேவையில்லை என்பதால் மிக வசதியான ஒன்று.

படத்திலுள்ள செங்கோண வடிவத்தில் கால்களை மடித்து உடலைத் தோள் மூட்டுக்குள் தாங்கும் படியாக உயர்த்தவும். குதிக்கால் தலையில் பிரித்து இருக்கும் நிலையில் முழங்கால்களை ஒன்றாக அமர்த்த வேண்டும். இந்த நிலையில் பிட்டத்தசைகளை இறுக்கி வைத்திருக்க வேண்டும். தினமும் 5-10 தடவைகள் செய்யலாம்.

இந்த இடுப்புவளையத் தசைகளுக்கான பயிற்சிகளைச் செய்வதால் பிற்காலத்தில் “அடி” இறங்கும் நிலையும் நாம் தடுக்க முடியும்.

(தொடரும்)

# மன்னார் பொது வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சைப் பிரிவு ஆரம்பம்

மன்னார்

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அடுத்த ஆண்டு ஆரமபத்தில் கண் சத்திர சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் மன்னார் மாவட்ட பிரதிப் பணிப்பாளர் யூட்ரதனி தெரிவித்தார்.

புலம்பெயர்தலுக்கான சர்வ தேச மன்னார் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற குடற்புழு நோய்க்கான இலவச மருந்து வழங்கல் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

சுகாதார அமைச்சு நடத்திய ஆய்வில் மாணவர்களில் அதிக மானோருக்கு ஞாபகசக்தி குறைவு, இரத்தச்சோகை போன்ற நோய் களுக்கான அறிகுறிகள் இருப் பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் குடற் புழுவேயாகும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் இந்த நோய்க்கான எதிர்ப்பு நடவ டிக்கை மேற்கொள்ளப்பட் டது.

அத்துடன் மன்னார் மாண வர்களுக்கும் இந்த நோய்க்கான அறிகுறி இருப்பதாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எமக்குத் தெரிவித்ததையடுத்து புலம்பெயர்ந்தோருக்கான சர்வ தேச நிறுவன மன்னார் கிளை யின் உதவியுடன் இதனை மேற் கொள்ள முடிந்தது.

மன்னார் பகுதியில் கண் சத் திர சிகிச்சை நிலையம் ஒன்றை அமைக்க இந்த நிறுவனம் சுகா தார அமைச்சின் அனுமதியுடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. 2006 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மன்னார் பொது வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சைப் பகுதி ஆரம்பிக்கப் படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற்பயிற்சி கட்டடங்கள் திறந்து வைப்பு

முல்லைத்தீவு

முல்லைத்தீவு தொழில்நுட் பக் கல்லூரியில் புதிதாக நிர்மா ணிக்கப்பட்ட தொழிற்பயிற்சி கட்டடங்கள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு தொழில்நுட் பக் கல்லூரியின் அபிவிருத்திச் சபைத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு மங் கள விளக்கேற்றலுடன் ஆரம்ப மானது.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத் தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி வைத்தார். மின் ஒட்டு பயிற்சி நிலையக் கட்டடத்தை ஒஜ் நிறுவன வெளிக்கள இணைப் பாளர் ஜெயராஜசிங்கம் திறந்து வைத்தார். கட்டட நிர்மாணப் பயிற்சிக் கட்டடத்தை ஒஜ் நிறு வனப் பிரதிநிதி வசந்தி திறந்து வைத்தார். மரவேலை பயிற்சிக் கட்டடத்தை முல்லைத்தீவு செயலக தலைமைப் பீட உதவி அரச அதிபர் ஆரணி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை முல்லைத்தீவு தொழில்நுட்ப நிறுவனப் பிரதிநிதி சுந்தர மூர்த்தி, உதவிப் பங்குத் தலைவர் திருமகன் அடிகளார், முல்லைத் தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகி யோர் நிகழ்த்தினர்.

# நெல்லைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் காலபோக நெற் செய்கையை கைவிட முடிவு!

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் இவ்வருடத்திற்கான கால போக நெற்செய்கையை மேற்கொள்வதில்லை என விவசாய அமைப்புக்கள் முடிவு செய்துள்ளன.

கிளிநொச்சியில் கமக்கார அமைப்புக்களின் சம் மேளனச் சந்திப்பு திட்ட முகாமையாளர் பொன். நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இந்த வருடம் குளநீர்ப்பாசன நெற்செய்கையையும் கைவிடுவதாக முடிவு செய் துள்ளனர். அத்துடன் விவசாயிகளின் உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாத காரணத்தால் கிளி நொச்சி மாவட்ட விவசாயிகள் பெரும் பொருளாதார நெருக் கடிக்குள்ளாகியுள்ளனர். இந்த வருட காலபோக நெல் வேளாண்மையை மேற்கொள்ள விவசாயிக ளிடம் பணம் இல்லாத நிலை காணப்படுகிறது.

குளத்தின் மூலம் நீரைப் பெற்றாலும், உரம், கிருமி நாசினி, செய்கைச் செலவு, உழவு இயந்திரச் செலவு போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளை விவசா யிகள் எதிர் நோக்குவதாக உருத்திரபுர பகுதி கமச் செய்கைக்கான திட்டக் குழுவின் தலைவர் நிக்கி லாஸ் தெரிவித்தார். கமக்காரர்கள் இந்த பிரச்சி னைக்கு தீர்வு கிட்டும்வரை நெற்செய்கையை மேற்கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளதா கவும் அவர் தெரிவித்தார்.

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவால் வன்னிப் பிரதேசத்தில் முதலுதவிப் பயிற்சிநெறி

கிளிநொச்சி

வன்னி மாவட்ட சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவால் கிளிநொச்சி, முல் லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கி பல்வேறுபட்ட சேவைகளை வழங்கி வருகிறது. அந்த வகையில் 2005 ஆம் ஆண்டு செப் ரெம்பர் மாதம் பல சேவைகளை வழங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வின்போது முதலுதவி சிகிச்சை நிலையங்களை அமைத்து சேவையாற்றியதோடு, சுகாதாரத்திணைக்களத்துடன் இணைந்து 400 இற்கும் மேற்பட்டவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி நெறிகளையும் நடத்தியுள்ளது.

ஏ.எஸ்.பி. நிறுவனப் பணியாளர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி நெறியை வழங்கியதோடு, வணிக நிறுவனங்களுடன் இணைந்து வணிக நிறு வனப் பணியாளர்களுக்கான முதலுதவி தொடர் பான பயிற்சிகளை வழங்கியதோடு, 30 இற்கும் மேற் பட்ட முதலுதவிப் பெட்டிகளையும் வழங்குவதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மனிதவள மேம்பாட்டுப் பகுதியுடன் இணைந்து நலன் பேணல் தொடர்பான பயிற்சி நெறியை நடத்தி, அவர்களுக்கான தேர்வுகளையும் நடத்தி சான்றிதழ்களை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுகாதாரத் திணைக் களத்துடன் இணைந்து 25 பாடசாலைகளுக்கு முதலுதவிப் பெட்டிகளை வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துடன் இணைந்து பூநகரிப் பிரதே சத்தில் பாடசாலை மாணவர்கள், பொது நிறுவ னப் பிரதிநிதிகளுக்கு முதலுதவிப் பயிற்சி நெறியை வழங்கும் திட்ட ஒழுங்கையும் மேற்கொண்டுள்ள னர்.




அண்மையில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கல்வி மாநாட்டு நிகழ்வில் வன்னி நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சிறப்புரையாற்றுவதையும், ஆய்வறிக்கை ஒன்றின் பின் பூந் தோட்டம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சே.பேனாட் அவதானிப்புரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட கல்வியியலாளர்களையும் படங்களில் காணலாம். (03)

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### செப்ரெம்பர் - 29

1906: கியூபா ஜனாதிபதி எஸ்ட்ராடா பால்மாவினுடைய வேண்டு கோளின்படி அமெரிக்க இராணுவம் அங்கே சென்றடைந்து, நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

1915: இத்தாலி - துருக்கி மீது போர் தொடுத்தது.

1913: துருக்கிக்கும் - பல்கேரியாவுக்கும் இடையே ஏற்பட்ட இரண்டாவது பால்கான் போரை முடிவுக்குக் கொண்டு வந்து, இரு நாடுகளுக்குமிடையே சமாதானம் ஏற்பட வழி செய்த கொன்ஸ்தாந்திநோபிள் உடன்படிக்கை ஏற்பட் டது.

1920: அமெரிக்காவின் பிட்ஸ் பார்க் என்ற இடத்தில் வானொ லிப் பெட்டிகள் விற்பனை ஆரம்பிக்கப்பட்டது.

1936: எப்.ஆர்.டி. ஸ்வெயின் என்பவர் 49967 அடி உயரம் விமா னத்தில் பறந்து சாதனை நிகழ்த்தினார்.

1939: சோவியத் ரஷ்யாவும், ஜேர்மனியும் நட்புறவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தப்படி இரு நாடுகளும் போலந்தைப் பகிந்து கொள்ள உடன்பாடு கண் டன.

1944: சோவியத் ரஷ்யா யூகோஸ்லேவேகியா மீது படையெடுத் தது.

1950: பெல் தொலைபேசி கம்பனியால், நியூயோர்க்கிலும், கிளீவ் லாண்டிலும் தன்னியக்கமாகப் பதிலளிக்கும் வசதி தொலைபேசித் தொடர்புகளில் ஆரம்பிக்கப்பட்டது.

1966: ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த இருபது பேர் ஒரு விமானத் தைக் கடத்திச் சென்று போக்லாந்து தீவு மீது படை யெடுத்தனர்.

1977: ரஷ்யாவால் சல்யூட் - 6 என்ற இரண்டாவது தலைமுறை விண்வெளி நிலையம் ஏவப்பட்டது.

1988: சர்வதேச நடுவர் மன்றத்தின் தலையீட்டால், கடந்த ஒன் பது வருடங்களாக இஸ்ரேலுக்கும்-எகிப்துக்கும் இடையே இருந்து வந்த எல்லைத் தகராறு தீர்த்து வைக்கப்பட்டது.

: அமெரிக்காவால் டிஸ்கவரி எஸ்.டி.எஸ் - 26 என்ற விண் கலம் ஐந்து விண்வெளி வீரர்களுடன் ஏவப்பட்டது.

1991: ஹெயிட்டியில் இராணுவப் புரட்சி ஏற்பட்டது. தேர்தல் கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது ஜனாதிபதி அரிஸ்டைட் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

1994: உலகின் ஐந்து அணு வல்லரசுகளையும் ஹிரோசிமாவுக்கு வந்து அணு ஆயுதத் தடை உடன்படிக்கையில் கையெழுத் திடும்படி ஜப்பான் அழைத்தது.

### செப்ரெம்பர் - 30

1774 : சுவீடனைச் சேர்ந்த இரசாயனவியலாளர் சீ.ஷீல் என்பவர் ஒட்சிசனை (எரியும் காற்றை) கண்டு பிடித்ததாக அறி வித்தார்.

1846: அமெரிக்காவைச் சேர்ந்த பல் மருத்துவர் வில்லியம் மார்ட்டன் ஈதரை மயக்க மருந்தாகப் பயன்படுத்த முடியும் என்பதனை முதன்முதலாக செயற்படுத்திக் காட்டினார்.

1918: இந்த மாதத்தில் மட்டும் ஜேர்மனியப் படையினர் 240,000 பேரை இழந்ததாக ஜேர்மனி அறிவித்தது.

1929: பிரிட்டனில் பி.பி.சி மூலமாக தினசரி தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1947: ஐ.நாடுகள் சபையில் ஒமானும், பாகிஸ்தானும் இணைந்து கொண்டன.

1957: பி.பி.சி தொலைக்காட்சியில் முதன்முதலாக ஆர்மைன்ட் ஸ்ரான்ட்போர்ட் என்ற பெண் செய்தி அறிவிப்பாளராகத் தோன்றினார்.

1962: கறுப்பினத்தவர் ஒருவரை முதன்முதலாக அனுமதித்ததன் காரணமாக, மிஸிஸிப்பி பல்கலைக்கழகத்தில் பெருங்கல வரம் ஏற்பட்டது. ஜேம்ஸ் மெரிடித் என்பவரே அந்தக் கறுப்பினத்தவர் ஆவார்.

1963: கியூபா, ஹெயிற்றி ஆகிய பகுதிகளில் இன்று வீச ஆரம்பித்த ஃப்ளோரா என்ற சூறாவளி தொடர்ந்து பத்துநாட்கள் அடித்தோய்ந்தது. இரு நாடுகளிலும் 6000க்கும் மேற் பட்டவர்கள் உயிரிழந்தனர். 300,000 வரையிலானவர்கள் வீடிழந்தனர்.

1966: பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்த தென்னாபிரிக்க நாடான பெச்சுவானாலாண்ட் விடுதலை அடைந்தது. போட்ஸ் வானா என்ற பெயருடன் புதிய குடியரசு நாடாகத் தன்னை அறிவித்துக் கொண்டது.

1988: இந்தியா 2275 கிலோ எடையுடைய டி.டி.ஆர்.எஸ்.எஸ் என்ற தகவல் தொடர்பு செயற்கைக் கோளை ஏவியது.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

புத்திசாலித்தனம் பிறவியிலேயே அமையலாம். ஆனால் திறமை என்பது நீங்களாக அதை வளர்த்துக்கொள்வதில் இருக்கும்.
- எட்வர்டு தே போனோ.

## நமது நோக்கு

### பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால்...

இன்று பொங்குதமிழ் நிகழ்வில் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டு தமது எண்ணத்தை, துயரத்தை, சினத்தை, ஆதங்கத்தை மற்றும சர்வதேசத்திற்கான தமது கோரிக்கைகளை உரத்து -ஒருமித்த- குரலில் ஓங்கி ஒலித்துக் கூறுவதற்கு தமிழ் மக்கள தயாராகி நிற்கின்றார்கள்.

“எமது நிலம் எமக்கு வேண்டும்”

“எமது நிலத்தை ஆக்கிரமித்து, எமது மண்ணில் எமக்கான வாழ்வுரிமையை பறித்து நிற்கும் ஆயுதபடையினர் எமது தாயகத்தை விட்டு வெளியேற வேண்டும்”

“எமது சுயநிர்ணய உரிமை எமக்கானதாக வேண்டும்”

“எமது மக்கள் அச்சமும், பீதியுமின்றி, அடக்குமுறைகளற்ற சூழலில் இயல்பு வாழ்வு வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தித் தர வேண்டும”

“சொந்த மண்ணில் விவசாயம் செய்யவும், எமது கடலில் சுதந்தரமாக நாம் தொழில் செய்யவும், சொந்த வீட்டில் வாழவும், எமக்குள்ள அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும்”

என சிங்கள ஆட்சியாளரிடமல்ல, சமாதானம், அமைதி, மனித உரமைகள் என்றெல்லாம் பெரிதாக பேசிவரும் சர்வதேச சமூகததிடம் தமது உறுதியும், இறுதியுமான வேண்டுகொள்ளை மிகவும் வெளிப்படையாக விடுக்கும் உணர்வெழுச்சியுடன் இன்று தமிழ் மக்கள் பொங்கு தமிழ் நிகழ்வில் ஒருமித்து குரலெழுப்பப் போகிறார்கள்.

இலங்கை அரசுடனான கடந்த முன்றரை ஆண்டு காலமாக அர்த்தமற்ற, நம்பிக்கையற்ற பேச்சுவார்த்தைகள் தங்களுக்கு எந்த விடிவையும், எந்த மாற்றத்தையும் தராத நிலையில் வரண்ட வாக்குறுதிகளையும், ஆத்மசுத்தியற்ற- அரசியல் சதி உள் நோக்குடன் கூடிய அரசியல் நகர்வுகளையும் நம்பி இனிமேலும் தொடர்ந்து சமாதான நம்பிக்கையுடன் வாழ்தல் என்பது எம்மை நாமே ஏமாளிகளாக்கும் நடவடிக்கையே என தமிழ் மக்கள் தர்மானம் கொண்டுள்ள நிலையில் பொங்கு தமிழராக மாற முடிவெடுத்தது நியாயமேயாகும்.

கடந்த மூன்றரை ஆண்டுகால சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்கிய நாடும், அதற்கு பின்புல ஆதரவை வழங்கிய நாடுகளும், இம் முயற்சிகள் தொடர்பான பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சித் தலைமைகளின், ஆத்மசுத்தியை நன்கு புரிந்து கொண்டிருக்கவே செய்வர். எனினும் கூட அவர்கள பிரச்சினையின் நியாயத்தன்மையைப் புரிந்து கொண்டு, அதற்கு தீர்வுகாணச் சாத்தியமான நடைமுறைகளைத் தொடர்ந்து நிகாரித்துவரும் சிங்கள ஆட்சித் தலைமைகளின் காலங்கடத்தும தந்திரோபாயத்துடன் ஒத்துப்போகின்றவர்களாகவே இருந்து வருகின்றமைதான் கவலைக்குரிய விடயம்.

மூன்று தசாப்த யுத்தத்தால் அழிவுகளையும், இழப்புக்களையும், நிரந்தரமான துயர்களையும் சுமந்து ஏதிலியராகவும், உரிமையற்றவர்களாகவும், உரிமையுடன் ஒண்டியிருக்கும் வதிவிடம் பறிக்கப்பட்டவர்களாகவும் வாழும் மக்கள் குறித்து சமாதான அனுசரணையாளர்களோ, சர்வதேச சமாதான அனுசரணையாளர்களோ, சர்வதேச சமாதான் பிரசாரகர்களோ, அதிக அக்கறை காடடுவதைவிடவும், மேலாதிக்க அதிகார வெறி கொண்டு அம்மக்களை அடக்கி, ஒடுக்க நினைக்கும் அரசுகளுக்கு பிற்பாட்டு பாடி நிற்க முனைவது தான் மிகவும் மோசமான மனித உரிமை மீறல செயற்பாடாகும்.

இனறைய சமதான முயற்சிகளில் இது நாள் வரையும் தமிழர் தரப்பு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வர, இலங்கை ஆட்சியாளர்கள் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கை காரணமேயல்ல.... இலங்கை பேரினவாத ஆட்சித் தலைமைகளின் குணாம்சம் அவர்களுக்கு பாரம்பரிய ரீதியில் பரீட்சயமான ஒன்றாகும்.

அவர்கள் நம்பியதும், தொடர்ந்து நம்புவதும் சர்வதேச சமூகத்தை மட்டுமேயாகும்.

உலகம் எமது பிரச்சினையை, கோரிக்கையை, போராட்டத்தை, இன்றைய எழுச்சியின் தவிர்க்கவே முடியாத அவசியத்தை மனித உரிமைகளை உணர்ந்து, ஏற்று, அங்கிகரிக்கும் ஜனநாயகப பண்புடன் புரிந்து கொண்டு செயற்படும் என்றே அவர்களின் கடைசி நேர நம்பிக்கையை அது உறுதி செய்யப் போகிறதா? அல்லது உதாசீனம் செய்யப்போகிறதா?

இந்தக் கேள்விக்கான பதிலில் இலங்கையின் அமைதி, சமாதானத்தின் உறுதி மட்டுமல்ல தமிழ் மக்களின் எதிர்காலமும தங்கியுள்ளதெனலாம்.

வரண்ட சட்டங்களும், வலிமையான ஆயுதங்களும், வாழ்வுரிமையை நிராகரிக்கும் அதிகாரமும், சுதந்திர தாகத்துடன் உயிரெழுச்சி கொள்ளும் எந்த ஒரு இனத்தினதும் விடுதலை உணர்வை அடக்கி, ஒடுக்க பயன்படாது என்பதை மனித குல வரலாறு பல்வேறு நாடுகளில் பல்வேறு கட்டங்களில் நடைபெற்ற போராட்ட நிகழ்வுகள் மூலம் ஆழமாகப் பதிவு செய்தேயுள்ளது.

இந்த நிலையிலேயே “இன்றைய பொங்கு தமிழ்” போர்க் கோலம் கொள்கிறது. இந்தப் போர்க்கோலம் உணர்த்தி நிற்கும் செய்தி இதுதான்-


எமது உரிமையை, எமது சுதந்திரத்தை, எமது மனித இருப்பை மதியுங்கள், அங்கீகரியுங்கள், உறுதிசெய்யுங்கள்- அவ்வளவு தான்!

இல்லையேல் - வரலாறு தமிழ் மக்களுக்கான தீர்வு என்ன என்பதற்கான தேர்வு எது என்பதை அவர்களுக்கு உணர்த்தவே செய்யும்.

அந்தத் தேர்வு அவர்களின் சுதந்திரத்தை உறுதி செய்வதற்கான இறுதித் தேர்வாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




செய்தி
மகிந்த ராஜபக்ஷவுக்காக ஹல உறுமய
ஜே.வி.பி தனித்தனியாக பிரசாரம்.

‘ஊர்சுற்றி’ யார் பார்வையில்...

# செருப்போடு நிற்காத செங்கோடன் நிலையில் கொழும்பு ஊடகங்கள்

அந்த நகரில் ஓர் ஓவியக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கண்காட்சிக்கு நாட்டின் மன்னர் வருவாரென்றும் சிறந்த ஓவியத்தைத் தெரிவு செய்து பரிசு வழங்குவாரென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. மன்னரும் வந்தார் காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஓவியங்களைப் பார்த்தார். ஓர் ஓவியம் அவருக்கு நன்றாகப் பிடித்து விட்டது. கலாரசனை மிக்க மன்னர் பல தடவைகள் அப்படியும் இப்படியும் பார்த்து அதைத் தெரிவு செய்வதற்கு விரும்பினார். இந்தச் சமயம் பார்த்து மன்னருடன் வந்த அவரது நம்பிக்கைக்குரிய பணியாள் மன்னரைத்தடுத்தார். இந்த ஓவியம் பரிசுக்கு தெரிவு செய்வதற்கு தகுந்தது அல்ல என்று சொன்னான். மன்னனுடன் வந்திருந்த மற்றும் கலைஞர்கள் திகைத்தனர் மன்னனும் திகைத்தான் தனது பணியாளரிடம் மன்னன் காரணம் கேட்டான். ஓவியம் மிகச் சிறப்பாக இருக்கிறது ஆனால் அந்த ஓவியத்தில் வரையப்பட்டுள்ள பாதணி சிறப்பாக இல்லை யென்று தெரிவித்தான். அதிலுள்ள குறையையும் எடுத்துக் காட்டினான். மன்னன் அதை ஏற்றுக் கொண்டான். பரிசுக்கு அதைத் தெரிவு செய்யாமல் விட்டான். ஓவியத்தில் குற்றம் கண்டு பிடித்த பணியாளரை மன்னன் பாராட் டினான். மற்றவர்களும் புகழ்ந்தார்கள். அந்தப் பணியாளருக்கு பெருமை பிடிபடவில்லை. இதன் பின்னர் எல்லா விடயங்களிலும் குற்றம் குறை பிடிப்பதே அவனுக்கு வேலையாக இருந்தது. ஒரு நாள் மிக முக்கியமான வேலையில் அவன் குற்றம் கண்டு சொன்னான். மன்னன் பார்த்தான் அதில் குறையே இல்லை. பணியாளரைப் பார்த்து “செங்கோடா நீ செருப்புடனே நின்றுகொள்” என்றார். இவன் குற்றம் கண்டு சொல்லி மன்னனும் ஏற்றுக்கொண்டது பாதணி பற்றியது. செங்கோடன் அந்தப் பணியாள்; பாதணி அதாவது, செருப்புத் தைக்கும் தொழிலாளியாவான். பாதணிகளில் குறைகண்டது சரி. அதையேவைத்துஎல்லாவற்றிலும்குறைகாணப் புறப்படக்கூடாது. அதாவது தெரியாத விஷயங்களில் வீணாகத் தலையிடக்கூடாது என்பதையே மன்னர் எடுத்துக்காட்டினார். இதைத்தான் இந்தக் கதையும் உணர்த்துகிறது. என்முன் அமர்ந்திருந்த நண்பர் பரமசிவம் இந்தக் கதையைச் சொல்லி நிறுத்தினார். எதற்காக இந்தக் கதையை இப்போது சொன்னீர் என்று கேட்டேன்.

எவரும் அரசியலுக்குள் புகுந்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் பிரதிநிதிகளாகச் செல்லலாம் என்ற நிலை 1956ஆம் ஆண்டில் ஏற்பட்ட காலத்திலிருந்து இனவெறியைக் கிளப்பி விடுவதில் இத்தகைய அரசியல்வாதிகளே முன்னணியிலிருந்தனர். இவர்கள் கிளப்பிவிடும் புரளியையே பத்திரிகைகள் பரப்பி நாட்டின் அமைதியைக் கெடுத்துவந்தன. ஆனால் இப்பொழுது அரசியல்வாதிகளுக்கு இனவெறிப்பிரசாரத்தை எடுத்துக் கொடுத்து நாட்டின் அமைதியைக் கெடுப்பதே தங்கள் பணியாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் சில ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் செய்து வருகின்றன. கதிர்காமர் விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பிரசாரம் செய்து, அதை வெளிநாடுகள் தடை செய்ய வேண்டுமென்று நாடு நாடாகப் போய் வந்தார். இந்தச் சமயம் கொழும்பிலிருந்து வெளிவரும் சில ஆங்கில சிங்களத் தினசரிகள் விடுதலைப்புலிகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதாகப் பிரசாரம் செய்து கதிர்காமருக்கு தூண்டுதலாக இருந்தன. இப்பொழுது இந்த ஊடகங்கள் நாட்டில் எந்தக் கொலை நடந்தாலும் புலிகள் மீது பழியைப் போடுவதுடன் கொழும்பில் நடைபெறும் வாகனத் திருட்டுக்களில் சம்பந் தப்பட்ட வாகனங்கள் புலிகளின் பகுதிகளுக்கே கடத்தி விற்கப்படுவதாகத் தொடர்ந்து பிரசாரம் செய்கின்றன. சிறுவர்களைக் கடத்துகிறார்கள், கொலை செய்கிறார்கள், வாகனங்களைக் கடத்தி விற்பதற்கு உதவுகிறார்கள் என்று பிரசாரம் செய்யப்படுகிறது. ஞானக்கோன் என்ற ஒரு செல்வந்த வர்த்தகர் பற்றிச் செய்தி வெளியிட்டதுடன் அவருக்கும், கதிர்காமருக்கும் தொடர்பிருப்பதாக எடுத்துக் காட்டியதுடன் அவர் ஒரு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட புகைப் படத்தையும் வெளியிட்டு இவர்தான் ஞானக்கோன் என்று அடையாளமும் காட்டியது ஒரு ஊடகம். இது மட்டுமல்ல இப்பொழுது அன்ரன் பாலசிங்கத்துக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தையும், தூண்டும் செய்திகளையும் வெளியிட்டு வருகிறது. வெளிநாடுகளில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வசதியாக இருக்கும் தமிழ்ப் பிரமுகர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டி வெளியிட்டு இவர்கள் பயங்கரவாதிகளுக்கு உதவிசெய்வதாகவும் வெளியிட்டு வந்தது என்று பரமசிவம் சொன்னார்.

இது மட்டுமல்ல நோர்வேக்கு எதிராகச் செய்திகள் வெளியிட்டுவந்ததும் இந்தப் பத்திரிகையும், இதனுடன் சேர்ந்த மற்றொரு ஆங்கிலத் தினசரியுமேயாகும். இந்த ஊடகங்கள் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதையே நோக்கமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நோர்வேயை மீண்டும் தொடர்ந்து அனுசரணையாளராகச் செயல் படும்படி அரசாங்கம் கேட்டிருப்பதன் மூலம் இந்தப் பத்திரிகைகளின் “கெட்டித்தனம்” தவிடு பொடியாய்ப்போயிற்று என்று சொன்னேன்.

ஆனால் கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கேட்டுக் கேள்வியில்லாமல் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்படுவது பற்றியோ, இளைஞர்கள் கடத்தப்படுவது பற்றியோ எவரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. வங்கிக்கொள்ளைகள் தனிப்பட்ட வர்த்தக நிலையங்களில் நடைபெறும் கொள்ளைகள் பற்றியும் மூச்சில்லை. கிழக்கில் இவை நடந்தால் புலிகள் என்று முத்திரை குத்திவிடுகிறார்கள்.

இந்த ஊடகங்களின் தொடர்ச்சியான பிரசாரமும் இதைத்தொடர்ந்து அரசியல் வாதிகளும், அரசாங்கமும் கொடுத்துவந்த அழுத்தங்களும், ஐரோப்பிய யூனியன் விடுதலைப்புலிகள் சமாதான முயற்சியில் வெளிநாடுகளுக்குச் செல்லாமல் தடுப்பதற்கு உதவியிருக்கிறது. நாடுபிளவுபடக்கூடாது தென்றும் பிளவுபட விடமாட்டோமென்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சமாதான முயற்சிகள் வெற்றியளிக்காமல் நாடு பிளவுபடுமானால் இதற்கு முழுக்காரணமுமே இந்த இனவெறி ஊடகங்களாகவே இருக்கப் போகின்றன. இதை சிங்களப் பொதுமக்கள் உணர்ந்து கொள்ளும் போதுதான் இவை புரிந்து கொள்ளும். செருப்போடு நிற்காத செங்கோடனின் நிலை அப்போதுதான் தெரியும். பொங்குதமிழும் புரியும் என்று சொன்னபடி நடந்தார் பரமசிவம்.

பொங்குதமிழ் நிகழ்வு மூலமாக ஒட்டுமொத்த சமூகத்தையும் திரட்டி எமது உரிமைக்கான குரலை உலக அரங்கிலே ஒலிக்கச் செய்யும் அதேவேளை, எமது விடுதலை வேட்கையையும், உணர்வையும் குறைக்கும் விதத்திலான சில நடவடிக்கைகளும் திட்டமிட்ட சில சக்திகளால் ஊடுபுகுத்தப்பட்டுள்ளன. சமுதாய சீரழிவுகள் எனும் வகையினுள் அடக்கப்படக் கூடிய இந்தச் செயற்பாடுகள் எமது சமூகத்தின் ஆணிவேரை அடியோடு பிடுங்கி எறிவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளேயாகும். இது தொடர்பிலே அனைவரும் கவனமாக இருக்கவேண்டும்.



# எழுச்சி கொண்ட எந்த இனமும் வீழ்ச்சி கண்ட வரலாறு இல்லை

மிகப்பெரியதொரு மக்கள் எழுச்சிக்கு யாழ்.குடாநாடு தயாராகிக் கொண்டிருக்கும் வேளையிது. மற்றுமொரு பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு இதுவாகும். சர்வதேச அரங்கத்திலே மீண்டும் மக்கள் உணர்வு களைப் பிரதிபலிப்பதற்கான சந்தர்ப்பமொன்று உருவாகியுள்ளது. சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசிய இனம் எனும் அங்கீகாரங்களை உலக அரங்கு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தும் மற்றுமொரு பொங்குதமிழ் நிகழ்வு இதுவாகும். வவுனியா தேசிய எழுச்சிப் பிரகடனத்துக்கு அமையவே இந்தப் பொங்குதமிழ் நிகழ்வுஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஒட்டு மொத்த தமிழினத்தின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வடிவமாகவே பொங்கு தமிழ் நிகழ்வு அமையும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துகளுக்கும் இடம் கிடையாது.

அதேவேளை இந்தமுறை பொங்கு தமிழ் நிகழ்வு ஏனைய, இதுவரை நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வுகளைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டதொரு நிகழ்வாகவே அமையப் போகிறது. ஏனெனில் இதுவரை, பொதுமக்கள் அணைவரும் அணிதிரண்டு நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வுகள் அனைத்துமே விடுதலைப்புலிகளுடைய பிரசன்னதுடனேயே நடைபெற்று. எனவே அந்தவேளையில் சில இனவாத ஊடகங்கள் பொங்கு தமிழ் நிகழ்வுகள் விடுதலைப் புலிகளின் பின்னணியிலும், வற்புறுத்தலின் பேரிலுமே நடைபெற்று வருகின்றன. இந்த நிகழ்வுகளில் பொதுமக்கள் உணர்வு ரீதியாகக் கலந்து கொள்ளவில்லையென பிரசாரப்படுத்தி வந்தன. இதனை சில சர்வதேசப் பிரதிநிதிகளும், நாடுகளும் உண்மையென நம்பி தத்தமது நாடுகளிலே விடுதலைப் புலிகளுக்கு எதிரானதொரு நிலைப்பாட்டைப் பின்பற்றி வந்தன.

ஆனால் இந்தமுறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வானது விடுதலைப்புலிகளுடைய போராளிகள், இராணுவத்தினருடைய செயற்பாடுகளின் காரணமாக குடா நாட்டைவிட்டு முற்றாக வெளியேறியுள்ள சூழ்நிலையிலேயே நடைபெறவுள்ளது. எனவே இந்த நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துவதிலோ அல்லது அதற்கான ஆயத்தங்களைச் செய்வதிலோ விடுதலைப்புலிகள் ஈடுபடுகிறார்கள் எனும் தனது வழமையான அலுத்துப்போன பிரசாரங்களைச் செய்யமுடியாத நிலை சில ஊடகங்களுக்கும், தமிழ் மக்களுக்கு எதிரான போக்குடைய அரசியல் வாதிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை இந்தமுறை பொங்கு தமிழ் நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து, தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுஅமைப்புகள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர். எனவே இதனை வேறு வடிவிலே திசைதிருப்புவதென்பது முடியாத விடயமாகவே இருக்கும்.

எனவே இந்தமுறை பொங்குதமிழ் நிகழ்வுகளிலே வழமையைவிட இன்னும் அதிகமான பொதுமக்கள் கலந்துகொள்வார்கள் எனும் எதிர்பார்ப்பு உள்ள நிலையிலே மூன்றரை லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெள்ளம் திரளும்போது அது நிச்சயமாக உலக அரங்கிலே பெரியதொரு மாற்றத்தை உண்டுபண்ணுவது என்பது யாராலும் தடுக்கப்படமுடியாத விடயமேயாகும். அதனாலேயே அவ்வாறானதொரு மாற்றம் ஏற்படுவதற்கு முன்னர் சர்வதேச மட்டத்திலே விடுதலைப்புலிகள் மீதானதொரு அபகீர்த்தியை ஏற்படுத்தும் முயற்சியிலே இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா உட்பட சிலர் ஈடுபட்டுள்ளனர். இவர்களது முயற்சிக்குக் கிடைத்த பலனாகவே ஐரோப்பிய யூனியன் அண்மையில் விடுத்துள்ள அறிவிப்பு அமைந்துள்ளது.

அதாவது விடுதலைப்புலிகளுடைய பிரதிநிதிகள் இனி ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொள்ளும் பயணங்களைத் தடைசெய்வது எனவும், அந்த நாடுகளிலே மேற்கொள்ளப்படும் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளுக்கு தடை விதிப்பதுடன், அந்த நாடுகளில் விடுதலைப்புலிகள் மீதான தடையை நடைமுறைக்குக் கொண்டுவருவது தொடர்பாக ஆராய்வது எனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொலையும், அதனோடு இணைந்து தொடராக நடைபெற்று வரும் கொலைகளுமே இந்த முடிவை எடுப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது என ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது. எனவே கதிர்காமரின் கொலையை விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் என்பதை ஐரோப்பிய யூனியன் உறுதிசெய்துள்ளதாகவே தோன்றுகிறது. இந்த உறுதியை ஐரோப்பிய யூனியன் விரைந்து எடுப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மிகவும் துரித கதியிலே மேற்கொண்டது. கதிர்காமருக்கு சிலையொன்றை அமைத்து அதன் கீழே இவரை விடுதலைப் புலிகளே கொலை செய்தார்கள் எனப் பொறித்து, நியாய பூர்வமாக நிரூபிக்கப் படாத ஒரு குற்றத்தை விடுதலைப்புலிகளுடைய தலையிலே இலங்கை அரசு கட்டிவிட்டுள்ளது.

அதேவேளை "செத்தும் கெடுத்தான்" எனும் நிலையையே கதிர்காமர் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திச் சென்றுள்ளதுடன் சிங்கள மக்களுக்கும், சிங்கள அரசியற் தலைமைகளுக்கும் தனது சாவின் மூலமாக மேலும் நன்மைகளையே தேடிக் கொடுத்து, தனது எஜமான விசுவாச நன்றியறிதலையும் வெளிப்படுத்தியுள்ளார். இந்த நிலையில் தென்னிலங்கை அரசியற் தளம் ஜனாதிபதி தேர்தலுக்காக சூடேறத் தொடங்கியுள்ளது. இந்தமுறை தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலே தமிழ் மக்களுக்கு எதிரான அனேக விடயங்களே பேசப்படவுள்ளன. குறிப்பாக மஹிந்த - ஜே.வி.பி - ஹெல உறுமய கூட்டணியினது பிரசாரக் கூட்டங்களிலே அப்பட்டமான இனவாதக் கருத்துகளே முன்வைக்கப்படுமென்பதிலே எந்தவித சந்தேகமும் இல்லை.

எனவே இந்த நிலையில் தமிழ் மக்கள் தமக்கான ஆதரவு தளத்தை சர்வதேச அரங்கிலே மேலும் வலுப்படுத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது. இதனாலேயே இந்தமுறை பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு மிகவும் எதிர்பார்க்கப்படும் ஒரு விடயமாகவும், அனேக மக்கள் அணிதிரண்டு உரிமைக்குரலை எழுப்ப வேண்டிய ஒன்றாகவும் உள்ளது. எனவே இந்தமுறை பொங்கு தமிழ் நிகழ்வு அனைத்துத் தரப்பு மக்களையும் வயது வேறுபாடின்றி, பால் வேறுபாடின்றி திரட்ட வேண்டிய ஒரு நிகழ்வாக விளங்குகிறது.

பொதுமக்களுள் அநேகமானோர் பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக மிகவும் விழிப்படைந்துள்ள சூழ்நிலையொன்றை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. நாட்டின் அரசியற் சூழ்நிலை குழம்பிப்போயுள்ள நிலையில் மீண்டுமொரு போர் ஏற்படப் போகிறது எனும் அச்சவுணர்வை மக்கள் மத்தியிலே தோற்றுவித்துள்ளது. எனவே அப்படியொரு போர் மீண்டும் திணிக்கப்படின் அதனை முழுமையாக எதிர்கொண்டு எமது வாழ்வுரிமையை, நிலவுரிமையை, சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யவேண்டிய தமது நிலைமையை உலகுக்கு ஓங்கி ஒலித்துரைக்க... இந்த முறை பொங்குதமிழ் நிகழ்விலே கலந்து கொள்ளவேண்டுமென அனைத்து மக்களும் ஆவலாகவுள்ளனர்.

மேலும் போரின்மூலம் பெறமுடியாத விடயங்களை பொங்குதமிழ் மூலமாகப் பெற்றுக்கொள்ளமுடியுமா? எனும் சந்தேகத்துக்கான விடையும் மாணவர்களால் பொதுமக்களுக்கு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்திலே முன்னெடுக்கப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வுகளிலே விடுதலைப்புலிகளே தமிழ் மக்களுடைய ஏக பிரதிநிதிகள் எனும் கருத்து முன்வைக்கப்பட்டு அவர்களோடு மட்டும் பேசு, விரைவிலே சமாதான தீர்வொன்றை உருவாக்கு எனும் விடயங்கள் உலக அரங்குக்கு முன் வைக்கப்பட்ட போது உலகம் அதனை ஏற்றுக்கொண்டது. இதன் பயனாகவ[...] விடுதலைப் புலிகளுடனான அர[...] யுத்தநிறுத்த ஒப்பந்தமும், அதன்வழி ஏ[...] தமிழ்க் குழுக்களின் ஆயுத களைவுக்[...] உடன்பாடும் எட்டப்பட்டது. இ[...] பெற்றன. எனவே பொங்குதமிழ் நிகழ்[...] மூலமாக சரியானதொரு மாற் றத்[...] உண்டுபண்ண முடியுமென்பது நிதர்[...] மான உண்மை. அந்த உண்மை [...] புரிந்துகொண்டவர்களாகவே இன்[...] அனேக பொதுமக்கள் காணப்படுவ[...] னால் மூன்று லட்சத்துக்கும் அதிகமா[...] பொதுமக்கள் கலந்துகொள்வார்கள் என்பது எதிர்பார்க்கப்படும் விடயமாக உள்ளது. இதனை பொதுமக்களும் உணர்ந்து கொண்டு உணர்வுடனும், எழுச்சியுடனும் பொங்குதமிழ் நிகழ்வுகளிலே கலந்து கொள்ளவேண்டியது அவசியமாகும்.

பொங்குதமிழ் நிகழ்வு மூலமாக ஒட்டுமொத்த சமூகத்தையும் திரட்டி எமது உரிமைக்கான குரலை உலக அரங்கிலே ஒலிக்கச் முயலும் அதேவேளை, எமது விடுதலை வேட்கையையும், உணர்வையும் குறைக்கும் விதத்திலான சில நடவடிக்கைகளும் திட்டமிட்ட சில சக்திகளால் ஊடுபுகுத்தப்பட்டுள்ளன. சமுதாய சீரழி[...]வுகள் எனும் வகையினுள் அடக்கப்படக் கூடிய இந்தச் செயற்பாடுகள் எமது ச[...]கத்தின் பண்பாட்டு ஆணிவேரை அடி[...]யோடுபிடுங்கி எறிவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளேயாகும் இது தொடர்பிலே அனைவரும் கவனமாக இருக்கவேண்டும்.


கொக்குவில் பகுதியிலே மலையாள[...] மாந்திரீகம் எனும் பெயரிலே சமூக [...]ழிவு நடவடிக்கைகளிலே ஈடுபட்டு வந்[...] ஒருவர் இளைஞர் குழுவொன்றினாலே[...] மோசமாகத் தாக்கப்பட்டு, அடித்து[...] விரட்டப்பட்டுள்ளார். இவரைப் போல[...] இன்னும் ஏராளமானோர் எமது சமூகத்[...]துக்குள் ஊடுருவியிருக்கிறார்கள். இவர்[...]களை இனங்கண்டு களைய வேண்டியது எமது அனைவரினதும் கடமையுமாகும். அப்போதுதான் எம்மால் உண்மையான விடுதலையை அனுபவிக்கமுடியும். அதனை[...] விடுத்து, எமது சுயத்தை இவ்வாறான[...] சக்திகளிடம் அடைவு வைத்துவிட்ட பி[...]னர் எமக்குக் கிடைக்கும் சுதந்திரத்தி[...] எந்தவிதமான சுவையும் இருக்காது. இத[...]னையும் பல்கலைக்கழக மாணவர்க[...] உள்ளிட்ட சமுதாய பொறுப்புணர்வுமிக்க சக்திகள் சிந்திக்கவேண்டும்.

உலக வரலாறுகளை எடுத்து நோக்[...] போது மக்கள் எழுச்சிகளே மானுட வி[...] தலைக்கு வழிவகுத்துள்ளன என்பதை அற[...]யக்கூடியதாகவுள்ளது. எனவே எழுச்சி கொண்ட எந்த இனமும் வீழ்ச்சி கண்[...] தாக வரலாறு கிடையாது. எனவே அதனை உணர்ந்து தமிழ் மக்கள் அனைவரும் பொங்கு தமிழ் நிகழ்விலே திரள வேண்டியது அவசியமானதாகும்.

"உலகத்தாய் வயிற்று மைந்தர் நசிந்து இனி நடக்கமாட்டோம். நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்." என உறுதி கூர்வோம்.

யாழவன்

# நிமிர்ந்த தமிழினம் குனியாது இனி[...]



பொங்கு தமிழ் நிகழ்வில் பொங்கும் நமதுள்ளம்
அங்கந்த வீச்சிற் புரியுமே - எங்கள் தலை
தங்கத் தலைவன் பிரபாகரன் வாழ்வில்
எங்கள் கொடி பறக்கும் பார்.

பொங்குந் தமிழினமும் மங்குற்சில நாளிலென
இன்றுஞ்சில சிங்களவர் எண்ணியே யிருக்கின்றார்
அந்தக் கதையெல்லாம் இந்தத் தமிழ்த் தலைவன்
வந்த பிறகிங்கு பொய்யாய்ப் பழங்கதையாய்
போனதையு மறிகிலரே பொங்குதமிழ் விழவிலவர்
காண்பார் மெய்கிலிர்க்கக் கைகால் நடுங்கிடவே
மாண்பார் தேசியத் தலைவன் தலைமையிலே
நிமிர்ந்த தமிழினமும் குனியா தினியெனவே
அடிமைச் சீட்டினிலே ஆவலுட னொப்பமிட்டு
மிடிமை தனைவிலைக்கு வாங்காதே நந் தமிழர்
சேரன் செங் குட்டுவனும் கரிகாற் பெருவளத்தான்
சீரார் நெடுஞ்செழியன் வழிவந் தவனெங்கள்
பிரபா கரனென்ன அறியு நாள் தூரமில்லை
வருமே சுதந்திரமும் வழிவினவி யெம்முன்னே
பொங்குந் தமிழினத்தி னிதயம் பொங்கியபின்
அடிமைத் தளையறுமே ஆர்க்குஞ் சிங்களமும்
கைசோர்ந்து மெய்சோர்ந்து துச்சா தனன்போல
ஐயமின்றி யவலமுறல் வையகமும் காணுமினி.

பண்டிதர் க.நாகலிங்கம்